# கல்வெட்டு



இப்படத்திற்கான விளக்கவுரை [illegible]



# என்னைக் கவர்ந்த சிற்பம்

மாண்புமிகு டாக்டர் கலைஞர் மு. கருணாநிதி அவர்கள்

நான் மிகவும் அண்மையில் மதுரை மாவட்டத்திலுள்ள அழகர் கோயிலுக்குச் சென்றிருந்தேன் கலைகளையெல்லாம் காண. அங்கு மணமண்டபம் என்ற ஒரு பகுதி இருக்கிறது. அங்கே மிக உயர்ந்த சிலைகளெல்லாம் வைக்கப்பட்டிருக்கின்றன. நான் அதை ஏற்றுக் கொள்கிறேனோ, இல்லையோ, வேறு விஷயம். ஆனால் நரசிம்ம அவதாரம் இரணியனை தூக்கி அவனுடைய வயிற்றைக் கிழிப்பதாக சிலை இருக்கிறது. தூக்குவது ஒன்று, தூக்கி வயிற்றைக் கிழிப்பது ஒன்றுமாக இரு சிலைகள் வைக்கப்பட்டுள்ளன. தூக்கும்போது ஒரு உருவத்தை, ஒரு கனமான மனிதனை, மனித உருவத்திலே இருக்கின்ற அந்த ஆண்டவன் தூக்குகின்ற நேரத்தில், ஒரு மனிதனை இன்னொரு மனிதன் தூக்கும் போது அவனுடைய உடலில் எங்கேங்கே என்னென்ன வளைவுகள் ஏற்படும் என்பதையெல்லாம் அந்த சிலையிலே நான் காண்கிறேன். பெருவிரல் கீழே அழுத்தமாக ஊன்றப்பட்டிருப்பதை பார்க்கும் போது, எவ்வளவு பலத்தை அவனை தூக்குவதற்கு அந்த நரசிம்ம அவதாரத்திலே இருக்கின்ற,-அந்த மனித உருவத்திலும், மிருக உருவத்திலும் இருக்கின்ற அந்த சிலைக்குக் கூட அது அவசியமா என்ற கேள்விக்கு இடம் தராமல், அவ்வளவு உயிரோட்டத்தோடு அந்த சிலையை அங்கே உருவாக்கியிருக்கின்ற சிற்பியினுடைய கைவண்ணம், அவனுடைய ஆற்றல் அத்தனையும் எனக்குத் தென்பட்டது.

தமிழக முதல்வர், மாண்புமிகு டாக்டர் கலைஞர் மு. கருணாநிதி அவர்கள் கோடையில் இத்துறையில் கல்வெட்டுப் பயிற்சி பெற்றவர்களுக்கு 22—5—1972ல் சான்றிதழ் வழங்கியபோது ஆற்றிய உரையின் ஒரு பகுதி.

---

<— தீமையின் உருவகம் இரண்யனைத் தூக்கி, காலில் கிடத்தி அவன் ஆகம் கிழித்தருளும் இந்நரசிம்ம உருவம் நாமக்கல்லில் உள்ளது கி பி 8-ஆம் நூற்றாண்டில் ஆண்ட ஓர் அதியமான் அரசனால் தோற்றுவிக்கப்பட்ட குடைவரைக் கோயிலில் உள்ளது. இதேபோன்று அழகர் கோயிலில் ஒரு நரசிம்மர் சிலை உள்ளது. அவ்வெழில் சிற்பத்தைக் கண்டு அதன் கலைத்திறனை போற்றி கலைஞர் அவர்கள் கூறியதுதான் மேலே அச்சிடப்பட்டுள்ளது.

# ஆப்கானிஸ்தானத்திலே விநாயகர்

*தமிழ்நாடு அரசு தொல்பொருள் ஆய்வுத்துறையை நிறுவ சிறப்பு அதிகாரியாகப் பணிபுரிந்து அண்மையில் காலஞ் சென்ற*

**திரு. தி. நா. இராமச்சந்திரன்,**

*அவர்கள் எழுதியது.*

இந்தியாவின் அண்மையில் அமைந்துள்ள ஆப்கானிஸ்தானத்திலே காபூல் நகருக்கு 10 மைல் அருகேயுள்ள ஸகர்தார் (சங்கரதாரா) என்னும் ஊரில் மனதைக் கவரும் வேலைப்பாடு பெற்ற சிற்பங்கள் பூமியிலிருந்து வெளிப்பட்டன. அவை முறையே சூரியன், சிவன் மற்றும் மஹாவிநாயகர் என்று சொல்லப்படும் பரமசிவன் மகன் பிள்ளையார் ஆகிய படிமங்களாக ஆராய்ச்சியாளரால் தீர்மானிக்கப்பட்டுள்ளன அவை நேர்த்தியான சலவைக் கல்லில் செதுக்கப்பட்டவை. விநாயகப் படிமம், குப்த காலத்திய சிற்பப்பாங்கை அனுசரித்து, சுருள் சுருளாக அழகு கொண்ட கேசத்துடனும் தோள் வரை நீண்ட வலம்புரி துதிக்கையுடனும், கௌசாம்பி நகரத்தில் காணப்படும் ஹரகௌரி சிற்பங்களில் போல் மேல் நோக்கிய ஆண் குறியுடனும், வாகனமே இல்லாமலும் காணப்படுகிறது விநாயகர் தரித்துள்ள வஸ்திரத்தின் வேலைப்பாடு தனிமையில் நோக்குங்கால் குருவி வால், பறவையின் இறக்கை முதலிய சித்திரங்களுடன் கூடியதாயினும், சேர்ந்து நோக்கும்போது ''அகான்தஸ்'' எனப்படும் கிரேக்க தேசத்திய இலையின் வடிவை நமக்கு ஞாபகப்படுத்துகின்றது. விநாயகருக்கே உரிய தொந்தியோ காணப்படவில்லை. கிரேக்க படிமங்கள்போல் மார்பு பரந்தும், பலத்துடனும் காணப்படுகின்றது. மார்பிலே காணப்படும் பூநூல் சர்பத்தை நினைவூட்டுகின்றது பூநூலின் பிரஹ்மமுடி சர்ப்பமுடியைப் போல் செதுக்கப்பட்டுள்ளது. இடது தந்தம் முறிந்தும், வலது தந்தம் ஒழுங்காகவும், நமது நாட்டிலுள்ள விநாயகர் படிமங்கள் போலவே, அங்கும் காணப்படுகின்றமையால், இங்குள்ள த்யானவழிபோல் அங்கும் பிள்ளையார் ''ஏகதந்தர்'' என வழங்கப்படுகிறார் பறவையின் இறக்கையென ஐயமுறும்படி, விசிறிபோல் விரிந்த காதுகளுடன் விளங்கும் காட்சி இவ்விநாயகப் படிமத்தைத் தொன்மையான காலத்தைச் சார்ந்ததெனக் குறிப்பிடும். நான்கு கைகளிலிருந்தும் மேலிரண்டும் முறிந்துவிட்டன. மேல் வலது கரத்தில் தாமரை மலரையும், கீழ் இரு கரங்களால் விநாயகர், இரு கணங்களின் தலையைத் தடவி அக்கணங்களின் பக்தி நோக்கை அங்கீகரிக்கும் காட்சியையும் காணலாம். குப்த சிற்ப முறைப்படி கணங்கள் சுருள் கேசத்துடனும், சுருள் போன்ற காதணியுடனும், கழுத்தினருகே கண்டமாலையுடனும் தோற்றமளிக்கின்றன கிரேக்க சிற்ப முறையிலே இம்மாதிரியுள்ள கணங்களையே ''டால்பின்'' என்பார்கள். விநாயகரின் தேகக்கட்டையும், வஸ்திரத்திலுள்ள அகான்தஸ் இலைச் சித்திரத்தையும், சிற்ப பாங்கையும் சீர்தூக்கின், குஷானர்களுக்கும் குப்தர்களுக்குமிடையே, நான்காம் நூற்றாண்டின் தொடக்கத்திலே இப்படிமம் செய்யப்பட்டுள்ளதெனலாம். தற்காலம், காபூல் வாழ் ஹிந்துக்கள் இவ்விநாயகப் படிமத்தை 'நரஸிங்கத்வாரா'' என்னும் காபூல் நகரிலுள்ள ஹிந்துகள் அங்காடியில், கோயில் செய்து வணங்கி வருகிறார்கள்.

## காடேஸ் :

காடேஸ் என்னும் நகரம் ஹிந்து-ஆப்கானிய வாழ்க்கைக்கு முக்கியமான கேந்தரம். காபூல் நகருக்கு 70 மைல் தெற்கேயுள்ளது. சில ஆண்டுகளுக்கு முன்,

கார்டெஸின் வெளிப்புறத்திலுள்ள மீர்சாகா எனப்படும் இடத்திலுள்ள ஒரு நீரருவியில் சுமார் 12000 நாணயங்கள் கண்டெடுக்கப்பட்டன. அவை தற்காலம் காபூல் காட்சி சாலையில் வைக்கப்பட்டுள்ளன. அவை 'புராணங்கள்' எனப்படும் இந்தியாவின் மிகவும் பழமையான நாணயங்களும், ஒஸ்தும்பரல் முதலான சிற்றரசு நாணயங்களும், இந்திய-பாக்ட்ரிய, இந்திய-பார்த்திய-இந்திய-ச்கிதிய என்னும் கிரேக்கக் கலப்பு கொண்ட நாணயங்களும், குஷான அரசுடையவும் ஷாஹி அரசர்களுடையவும் நாணயங்களெனவும், புதைபொருள் ஆராய்ச்சியினால் நமக்கு தெரியவருகிறது.

கார்டெஸின் சரித்திரம் ஆப்கானிஸ்தானத்திலே ஹிந்துக்களின் சீரும் சிறப்புங்கொண்ட காலத்தைச் சுற்றி அமைந்துள்ளது. 850 கி.பி. யில் லகடோர்மா என்னும் பெரு மன்னனின் மந்திரியான கள்ளரென்னும் வேதியன், காபூர்ஷாஹி,

## தஞ்சைப் பெருங்கோயிலைக் கட்டிய தபதி :

இராஜராஜனின் ஆணையை ஏற்று உலகம் போற்றும் தஞ்சைப் பெருங்கோயிலைக் கட்டிய ஸ்தபதி வீரசோழன் குஞ்சரமல்லன் ஆன இராஜராஜப் பெருந்தச்சன் என்பவன். அக்காலத்தில் கட்டிட வல்லுநர்களைப் பெருந்தச்சன் என்று அழைப்பது மரபு. இராஜராஜன் தஞ்சையில் ஒரு பெருங் கோயிலைக் கட்டியது போலவே அவனது தலைமைத் தனித் தேவி லோகமாதேவி திருவையாற்றில் ஒரு கோயில் எடுத்தாள். அக்கோயிலுக்கு லோகமாதேவீச்சுரம் என்று பெயர். அக்கோயிலைக் கட்டிய தபதியின் பெயரும் இப்பொழுது கிடைத்துள்ளது. அவன் பெயர் கலியுகரம்பைப் பெருந்தச்சன் என்பது. இதைக் கூறும் கல்வெட்டைப் பாருங்கள்,

"தளி செய்த நக்கன் ஆச்சணை கலியுகரம்பைப் பெருந்தச்சன்" (இக்கல்வெட்டை தமிழ்நாடு அரசு தொல்பொருள் ஆய்வுத்துறை கல்வெட்டு நிறுவனத்தில் பயிலும் மாணவர் திரு இராசகோபால் படித்து வந்துள்ளார்)

தமிழகத்துத் தலை சிறந்த மன்னன் இராஜராஜனும் அவன் தேவியும் ஆதரித்த இரண்டும் பெரும் கட்டிட வினைஞர்களின் பெயர்கள் நமக்கு கிடைத்துள்ளது பெருமைக்குரிய வரலாற்றுச் செய்திகள் அல்லவா!

பராஹ்மனஷாஹி, ஹிந்து ஷாஹி, காபூல் ராயன்கள் என இந்நான்கு பேர்கள் கொண்ட ஒரே வம்சத்தை உண்டாக்கி, அதற்கு கர்டெஸை ராஜதானியாகக் கொண்ட அரசையும் அளித்தான். 871 கி.பி. யில் ''சாந்ததேவ'' அல்லது ''சாமந்த தேவ'' என்னும் காபூல்ஷாஹி மன்னனை சப்பரித் என்னும் இஸ்லாமிய வம்சத்தின னுன யாகுப்-பின்-லைத் என்னும் வல்லரசன் போரில்வென்று காபூலைவிட்டே விரட்டிவிட்டான். தோல்வியுடன் வெளியேறிய காபூல்ஷாஹி ஹிந்து அரசன், காபூலுக்கு 70 மைல் தேற்கேயுள்ள கர்டெஸில் புது அரணைச் செய்துக்கொண்டு சிறுது காலம் நிம்மதியாக வாழ்ந்து வந்தான். ஆயினும் 878-900 கி.பி. யில் ஆம்ரோபின்லைத் என்பவனுல் அங்கிருந்தும் துறத்தப்பட்டான். பிறகு இக்காபூல் ஷாஹி வம்சத்தைச் சார்ந்த மன்னர்கள் ஸிந்து நதிவெளியை அடைந்து, ஓஹிந்து (தற்காலம் உஹிந்து எனப்படும்) என்னும் ராஜதானியைச் சுற்றியுள்ள நாட்டில் அரசு நடத்தி வந்தார்கள். ஓஹிந்து என்பது அட்டாக் தற்காலம் பாகிஸ்தானில் உள்ள பட்டணத்திற்கு 16 மைல் வடக்கேயுள்ளது.

சில ஆண்டுகளுக்கு முன் கர்டெஸின் அருகாமையில், ஒரு அழகிய சலவைக் கல்லில் செதுக்கப்பட்ட விநாயகப்படிமம் தோண்டி எடுக்கப்பட்டது. தற்காலம் காபூலில், தர்காபீர் ரதன்நாத் என்னும் இடத்தில் இவ்விநாயகர் கோயில் கொண்டு, காபூல் வாழ் ஹிந்துக்களால் வணங்கப்பட்டு வருகிருர். படிமம் 28'' உயரம், 14'' அகலம் கொண்டது. அதன் பீடத்தில் இரண்டு வரிகொண்ட கல்வெட்டு சாஸனம் காணப்படுகிறது. மொழி சம்ஸ்க்ருதம். எழுத்து தொன்மையான நாகரிலிபி. அதிலடங்கிய விஷயம் கீழ் வருமாறு:-

1. ओं संवत्सरे अष्टतमे महाज्येष्ठमास शुक्लपक्ष तिथौ त्रयोदश्यां शुदि 10+3 ऋक्षे विशाख शुभे सि[ं]हे जित्र [क]

2. मे महत् प्रतिष्ठा यंतमिदं महाविनायक परमभटारक महाराजाधिराज श्री षाहि खिंगलै: ख्यात षाहिपादै:

'' ஓம் இது ஒரு அரிய பெரிய சிற்பசித்திரம். மஹாவிநாயகக் கடவுளுடை யது இச்சிலையை ப்ரதிஷ்டை செய்தவன் மஹாராஜாதிராஜனென்னும், பரமபட் டாரகனென்றெல்லாம் புகழ்பெற்ற ஷாஹி அரசன் ஷாஹிகிங்களன். இவ்வரசன் தான் செங்கோல்கொண்டு ஆண்ட எட்டாவது ஆண்டிலே மஹாஜ்யேஷ்டமாசம், சுக்லபக்ஷம், த்ரயோதசி, விசாகநக்ஷத்திரம், சூர்யன் ஸிம்ஹமாதத்திலுள்ள புண்ணிய தினத்தன்று இச்சிற்பத்தை பூஜைக்காக ப்ரதிஷ்டை செய்து, அதனுல் புகழெய்தி னுன்''.

லிபியின் பாங்கை அனுஸரித்த கால இடையில் (Palaeography) இக்கல்வெட்டு கி.பி. ஏழாம் நூற்ருண்டென இடம் பெறுகிறது, மேலே, கி.பி 850 ஆண்டில், வேதிய அமைச்சர் கள்ளரென்பான் ஷாஹி வம்சத்தை நிலைநாட்டினுனென்ருே மல்லவா? அதற்கு முரணுக அல்லவா இக்கல்வெட்டின் சான்றுவென சம்சயம் அப்படி யல்ல ஐயப்படலான் காஷ்மீர் நாட்டின் செல்வமான கல்ஹணரின் ராஜதரங்கிணி யில். காஷ்மீர் மன்னர்களில் மிகவும் பழமையானவர்களில் நரேந்திராதித்யனென ஒரு அரசன் இருந்தானென்றும் அவனுக்கு கிங்கிளன் என மாறு பெயருண்டெனவும் குறிப்பிடப்பட்டிருக்கிறது. இதைப்போலவே, தற்காலம் கல்கத்தா, இந்தியன் மியூஸியம் காட்சி சாலையிலுள்ள நாணயமொன்றில் ''கிங்கி[?]'' என்று பொறிக்கப் பட்டிருக்கிறது. பஞ்சாப் மாகாணத்தில் பலவிடங்களிலிருந்து ஜே. பி. ராலின்ஸி யினுல் கண்டெடுக்கப்பட்ட 9 நாணயங்களிலும் ''கிங்கி]?]'' என வரையப்பட்டேயுள்

ளது. வின்ஸென்டு ஸ்மித் என்னும் நாணய விஞானி இவை கி.பி. 6-ஆம் நூற்ருண்டைச் சேர்ந்தவையே என்ருர். ''கிங்கி'' என்பதும், நமது கல்வெட்டிலுள்ள ஷாஹி கிங்கன்வென்பதும் ஒரு வம்சத்தையே. அதாவது ஷாஹி வம்சத்தையே குறிப்பதுடன், 850 கி.பி. க்கும் வெகுகாலம் முன்பே இந்த ஷாஹி வம்சமுண்டெனவும் தெள்ளென அறிவிக்கின்றது ஆதலால் காலநிர்ணயத்தில் ஒருவித முரணுமில்லை

கல்வெட்டில் மஹாவிநாயகரெனக் கூறியுள்ள நமது பிள்ளையாரை கவனிப்போம் கிரேக்க சிற்பம்போல், கால்களிலும், கைகளிலும், பரந்த மார்பிலும், தக்க பலக்கட்டுடன் காண்கின்ருர் பிள்ளையார். கால்களின் அமைப்போ ''ஆலீட'' மென்னும் பக்க அசைவுடனேயே காணப்படும். தும்பிக்கை இடதுபுறம் திருப்பத்துடனும் முறிந்த தந்தமும் இடதுபுறமெனவும் இங்கு கூறியுள்ளது. சார்நாத்தில் குப்த காலத்தில் உண்டான சிற்பபாணியை ஒட்டியே இச்சிற்பத்தின் அணிகலமாகும். தலையில் ஒட்டியும், அழுத்தமுடனும் வைக்கப்பட்ட சிறு மகுடமும் கழுத்தில் மணி, பவழம், வளையங்களுள் கோர்க்கப்பட்ட கண்டஹாரமும் இச்சிற்பம் பின்குப்த காலத்தில் (500 கி.பி.) செய்யப்பட்டிருக்கக் கூடுமென வலியுறுத்தும் சான்ருகும். இரண்டு செவிகளும் இலைபோல் சித்தரிக்கப்பட்டமையால், பறவைகளின் விரிந்த இறக்கைகளை நினைவூட்டும். கைகளெல்லாம் ஒடிக்கப்பட்ட பரிதாப நிலையிலிருந்தும், அவை நான்கெனவும், செய்யப்பட்டபொழுது மிகவும் நேர்த்தியாகயிருத்திருக்கவேண்டுமென்றும், சிற்பத்தைப் பார்க்கும்பொழுதே நமக்குத் தெரியும். ஒரு பாம்பே விநாயகரின் யஞோபவீதம். பாம்பு எப்படி பூநூலா



ஆப்கானிஸ்தானத்தில் கிடைத்த பிள்ளையார் சிற்பத்தின்
கீழ் பகுதியும் கல்வெட்டும்.

யிற்று? இப்பொல்லாப் பாம்பின் கதை மிகவும் விந்தையானது. விநாயகச் சதுர்த்தி யன்று, பக்தர்களின் அழைப்பிற்கிணங்கி அங்கங்கு சென்று பக்தர்களளித்த மோதகங்களையுண்டு, தனது வாஹனமேறி பவனி வந்தார் விநாயகர். வழியில் பாம்பொன்று தென்பட, பிள்ளையாரின் வாஹனமான எலி தன் இயற்கை வைரியைக் கண்டு தன்னை விழுங்கிவிடுமே இப்பொல்லாப் பாம்பு என பயந்து, வளை தேட ஓடவும், அவ்வோட்டத்திலே பிள்ளையார் நிலை தவறி கீழே விழவும், வயிறு குலுங்க விருந்த மோதகக் குவியலும் பிள்ளையார் வயிறு நீங்கி கீழே விழுந்தோடவும், அதை இழக்க மனமில்லாமல் பிள்ளையார் அக்குவியலை மறுபடியும் தனது குக்ஷியிலே அடைத்து, அடைப்பு விரியாமலிருக்க, அப்பொல்லாப் பாம்பையே கயிறுகச் செய்து தனது குக்ஷியைச் சுற்றியும் யக்ஞோபவீதமாகவும் செய்தாரென்பதுமே இப்பொல்லாப் பாம்பின் கதை. மறுபடியும், இக்காக்ஷியுடன், தனது எலிவாஹனமேறி பவனியுடன் வந்தார் அப்பொழுது, விண்ணிலே சந்திரன் உதயமாகி இருந்தான். பிள்ளையாரின் மோதக வரலாறையும், அவருக்கு நேர்ந்த இக்கட்டையும் கண்டு நகைத்தான். நகைவொலியைக் கேட்டு, பிள்ளையார் வெகுண்டு, தனது இடது தந்தத்தை முறித்து சந்திரன் பேரிலெறிந்தார். அந்த தந்தமே சந்திரன் மேனியிலே சொருகுண்டு இப்பொழுதும் கருத்த களங்கமாகக் காணப்படுகிறது என்பார் பௌராணிகர்

மஹாவிநாயகர் சக்திவாய்ந்தவர். அவரையே மஹாகணபதியென்போம். மிகுந்த பலமும், கேட்போரின் அவாவைத் தணிக்கும் வல்லமை பூண்டவருமாவார். மேல் நோக்கியுள்ள அவரது ஆண்குறி அவர் வல்லமையும், அவர் ''வல்லப'' உருவத்தையும் நமக்குத் தெரிவிக்கும். அரையிலிருந்துள்ள அவரது வஸ்திரத்திலே, கீர்த்திமுகமெனப்படும் சிங்கத்தின் தலையையும், தாமரை மொட்டுகளையும், சிற்றுக் குருவிகளின் தோகையையும் அழகாகச் சித்தரித்திருக்கிறுன் சிற்பி. உடல், வயிறு, பாம்பு-பூநூல், உயர்நோக்கியுள்ள ஆண்குறி, கீர்த்திமுகம், பறவையின் தோகை தாமரை மொட்டு முதலிய இச்சித்திர வேலை பீஹாரில் செழிப்புடன் வளர்ந்த மகதக் கலையின் வாசனையைக் குறிக்கும். ஆயினும், பலக்கட்டுடன் வாய்ந்த கால்களும், கைகளும், தொந்தியின் சிறுமையும், இவ்விநாயகச் சிற்பம் கிரேக்க கலையின் பொற்காலத்தைச் சார்ந்தது எனவே வலியுறுத்தும். அப்பொற்காலம் கி மு இரண்டாம் நூற்றுண்டிலேயே உண்டாயிற்று ஆறு, ஏழு நூற்றுண்டிலும் வளர்ச்சிபெற்று விளங்கியிருந்தது என்பதற்கு நமது மஹாவிநாயகச் சிற்பமே அத்தாட்சி. நமது தமிழ் தெய்வங்களிலே முதன்மை வாய்ந்த பிள்ளையார் அம்மாதிரியே ஆப்கானிஸ்தானத்திலும் திகழ்ந்தாரென்பதில் நாம் பெருமை கொள்வோம். இது போதாதா நமக்கு !

---

# சோழர் ஆட்சியில் பெண் அதிகாரிகள்

மேலை நாட்டார் வந்த பின்னர் தான் பெண்கள் அரசியல் அதிகாரிகளாகும் வாய்ப்பு கிடைத்தது என சிலர் தவறுன கருத்துக் கொண்டுள்ளனர். 1000 ஆண்டுகளுக்கும் முன்னரே தமிழ் நாட்டில் பெண்கள் அரசியல் அதிகாரிகளாகத் திகழ்ந்திருக்கிறுர்கள். அப்பெருமையை சோழராட்சியில் காண்கிறேம். இராஜராஜன் ஆண்டகாலம். அவன் தேவி லோகமாதேவி திருவையாற்றில் ஒரு கோயில் கட்டியிருக்கிறுள். அதற்கு தானங்கள் கொடுத்துள்ளாள். அவற்றை லோகமாதேவியின் அதிகாரி ஒருவரும் 'அதிகாரிச்சி' ஒருத்தியும் மேல் பார்வையிட்டனர். அக்கல்வெட்டை 13-ஆம் பக்கத்தில் பார்க்கலாம்.

# கல்வெட்டில் நீதி

இரா. நாகசாமி.

தமிழ் நாடு அரசு தமிழகத்திலுள்ள பல்வேறு ஊர்களில் உள்ள கல்வெட்டுகளைப் படியெடுத்து வரலாற்றைச் சீராக அமைப்பதற்கு ஒரு திட்டம் மேற்கொண்டு ஊர் ஊராகக் கல்வெட்டுகளை ஆய்ந்து வருவது அனைவரும் அறிந்ததே. கடந்த ஆண்டு வட ஆற்காடு மாவட்டம், செங்கம் வட்டப் பகுதியில் சுமார் 60-க்கும் மேற்பட்ட வரலாற்றுச் சிறப்பு வாய்ந்த நடுகற்களைப் படியெடுத்து வந்துள்ளது. அவை தமிழக வரலாற்றிற்குச் சில சிறந்த செய்திகளை அளித்துள்ளதும் பல்லோர் கவனத்தைக் கவர்ந்துள்ளது. அண்மையில் இத்துறை கல்வெட்டாய்வாளர் திரு. கு. தாமோதரன் தாமரைப்பாக்கம் என்ற ஊரில் அக்னீஸ்வரர் கோயிலில் இருந்து படி யெடுத்து வந்துள்ள ஒரு கல்வெட்டு மிகவும் சிறப்புடைய தாக உள்ளது.

இக்கல்வெட்டு இரண்டாவது இராஜேந்திர சோழன் காலத்தில் அதாவது 12-வது நூற்ருண்டில் பொறிக்கப்பட்டது. இக்கல்வெட்டில் ஒரு குடும்பத்தைச் சேர்ந்த அண்ணன், தம்பி இருவரும் ஒருவரோடொரு வர் சண்டையிட்டுக் கொள்ள, அதிலே அண்ணன் இறந்துவிட, அவர்களின் தந்தை வழக்கிட, ஊரார் எடுத்த முடிவைக் குறிக்கிறது. அன்று நாட்டவர் வழக்கை விசாரித்து அறிந்த முறையும், தண்டனை அளித்த முறையும் சிறப்பாகக் குறிக்கப்படுகிறது.

சண்டையிட்டுக் கொண்டவர்கள் வெள்ளாளர் குடியைச் சேர்ந்த வர்கள். அக்காலத்தில் ஒவ்வொரு குடிமக்களும் தங்கள் இனத்திற்கென ஒரு தனி சமுதாய அமைப்பை வைத்துக் கொண்டு தங்கள் இனத்திற்கு வரும் நன்மை, தீமைகள் ஆகியவற்றை அவ்வமைப்புகளை கேட்டு அறிந்து, எடுக்கும் முடிவுகளை ஏற்றுக்கொண்டனர். அக்காலத்து உழுது வர்கள் சிறப்பு பெற்ற சித்திரமேழி நாட்டார் என்ற அமைப்பைக் கொண்டிருந்தனர். இவர்களுக்கென்று தனியே ஒரு மெய்க்கீர்த்தியே உண்டு. இவர்கள் தங்களை பூமிதேவி புத்திரர்கள் என்று அழைத்துக் கொண்டனர். அறத்தின் வழி நிற்பவர்கள் என்றும், சித்திரமேழி தர்மம் நீதி நடாத்துபவர்கள் என்றும் இக்கல்வெட்டில் இவர்கள் குறிக்கப்படு கிருர்கள் இவர்களுடைய சமுதாய அமைப்பிற்கு 'நாடு' என்று பெயர். இதில் அங்கம் வகிப்பவர்கள் 'நாட்டார்' என்று அழைக்கப்பட்டனர். பல நாடுகள் கூடும் அமைப்பிற்கு 'பெரிய நாடு' என்றும், பங்கு பெற்ற வர்களுக்கு 'பெரிய நாட்டவர்கள்', 'பெருக்காளர்' என்றும் அழைக்கப் படுகின்றனர். இந்த வழக்கைக் கேட்டவர்கள் இது போன்ற அமைப்பைச்

சேர்ந்த பெரிய நாட்டவர்கள். இப்பெரிய நாடு இராஜேந்திர சோழனின் பெயரால் ‘இராஜந்திர சோழ சித்திரமேழி பெரிய நாடு’ என்று அழைக்கப் பட்டது.

இந்த பெரிய நாட்டிடம் கண்ணுபுரத்து வெள்ளாளன் தருப்பேரு டையான் தாழிக்கோன் என்பவன் வந்து வழக்குரைத்தான். இவன் உரைத்த தையும், நாட்டார் கேட்ட கேள்விகளையும் இவன் அளித்த பதில்களையும்

---



குதிரைமீது கம்பீரமாகத் தோற்றமளிக்கும் இச்சிலை, மதுரையை சிறப்புடன் ஆண்ட திருமலை நாயக்கருடைய உருவச் சிலையாகும். மதுரை புது மண்டபத்தில் இருக்கிறது. இந்திய நாட்டில் ஆண்ட எந்த இந்து அரசனின் உருவச் சிலையும் இவ்வளவு பெரியதாக குதிரை மீது அமர்ந்ததாக இதுகாறும் கிடைக்கவில்லை. இங்குள்ள கடைகளால் இது பெரிதும் சேதமடைந்து வருவது வருந்தத்தக்கது.

கல்வெட்டு மேற்கோள் போலக் குறிக்கிறது. "என் மகன் சங்கரத்தடியானும், என் மகன் பெரியானும் தடுபடுக்கிற இடத்துத் தம்பியை தமையன் அரிசப் பட்டு அடிக்க தம்பியும் தமையனை எதிரே அடித்தான். தம்பி அடிச்ச அடி யிலே தமையன் பட்டான்" என்று அவர்கள் தந்தை எடுத்துரைத்தான்.

அப்பொழுது நாட்டார் அவனை நோக்கி கேள்விகளைக் கேட்டனர். "உனக்கு இவ்விருவரும் அல்லது மற்று மக்கள் உள்ளரோ" என்று கேட்ட னர். "மற்று மக்கள் யாரும் இல்லை; இவர்கள் தாயும் நானும் உள்ளோம்" என்று சொன்னான். அடுத்து, "உனக்கு அர்த்தம் (பொருள்) தான் உண்டோ?" என்று கேட்க, "அர்த்தமும் இல்லை" என்றான். ஒரு குடி கேடானதையும், இவர்களைக் காப்பார் இல்லாததையும், பொருள் இல்லா ததையும் கேட்டு நாட்டவர் ஒரு முடிவு எடுத்தனர். தம்பிக்கு இதற்காக மரண தண்டனை விதிக்க வேண்டாம். இவன் வயது முதிர்ந்த தாயையும் தந்தையையும் காக்க வேண்டியிருப்பதால் இவனுக்கு நேர்ந்த பாவத்திற் காக அவ்வூர் கோயிலில் அரை விளக்கு எரிக்க பொருள் அளித்தல் வேண்டும் என்று தீர்ப்பு கூறினர். அது கல்வெட்டில் 'ஒரு குடி கேடானமையாலும், இவர்களை ரக்ஷிப்பார் இல்லாமையாலும், அர்த்தம் இல்லாமையாலும், திருத்தாமரைப்பாக்கத்து திருஅக்னீஸ்வரமுடைய மகாதேவருக்கு நந்தாவிளக்காக அரை விளக்கு வைத்து வயஸ்பரிணதை சென்ற தாயையும், தமப்பனையும் ரக்ஷிப்பானாக. தர்மம் நோக்கி இவன் இதற்கு பட வேண்டா' என்று நாட்டார் விதித்தனர்.

இந்த தீர்ப்பை 'சுத்த பட்டிகை' என்று கல்வெட்டு கூறுகிறது. தவறிழைத்து செய்த பாவத்திலிருந்து தூய்மை பெற எடுத்த தீர்ப்பு ஆதலின் இது 'சுத்தபட்டிகை' என்று அழைக்கப் பட்டது. இம்முடி வெடுத்து அதற்கு கையெழுத்திட்டவர்களின் பெயர்களும் கல்வெட்டில் குறிக்கப்பட்டிருக்கிறது. இவர்கள் அனைவரும் வெள்ளாளர் என்று குறிக்கப்படுகின்றனர்.

இக்கல்வெட்டில் சில வடமொழிச் சொற்கள் இடம் பெற்றுள்ளன. 'அர்த்தம்', 'வயஸ்பரிணதை' முதலிய சொற்கள் உள்ளன. ஆயினும் இதுகாறும் கிடைக்காத நல்ல சில தமிழ் சொற்களும் கிடைத்துள்ளன. 'தடுபடுக்கிற இடத்து' என்ற ஒரு சொல் வந்துள்ளது. 'தடு' என்றால் எதிர்த்தல், மறித்தல் என்று பொருள். தடுபடுத்தல் என்றால் ஒருவரோ டொருவர் எதிர்த்து அடித்துக் கொண்டதைக் குறிக்கிறது போலும். அடுத்து 'அரிசப்பட்டு' என்று ஒரு சொல் வருகிறது. அரிச என்றால் மகிழ்வு என்ற பொருள் அகராதிகளில் கொடுக்கப்பட்டுள்ளது - ஆனால் இங்கு ரோஷப்பட்டு என்று பொருளில் வந்துள்ளது போல் காணப்படு கிறது. மற்றொரு இடத்தில் 'இவ்வகை பட்டாங்கு சொல்ல எழுதினேன்' என்ற ஒரு தொடர் வருகிறது. பட்டாங்கு என்பது, நீதி நூல்களில் குறிப் பிட்டுள்ளது என்ற பொருளில் இங்கே வழங்கப்பட்டுள்ளது ஒரு சிறப் பாகும்.

அவன் செய்தது தவறே ஆனாலும் அவனுக்களிக்கும் தண்டனையின் விளைவுகளையும் மனதில் கொண்டு தீர்ப்பளித்தனர் என்று தெளிவாக அறியலாம். "இவன் இதற்காக படவேண்டாம்" என்பதிலிருந்து இது போன்ற குற்றத்திற்கு மரண தண்டனை விதிக்கப்படும் என்பதும் தெளிவாகிறது. வயது வந்த பெற்றோர்கள், பொருள் அற்றவர்கள், வேறு எவராலும் காக்கப்படும் வசதி அற்றோர்கள் இவனுக்கு அளிக்கப்படும் தண்டனையினால் பாதிக்கப்படக் கூடாது என்ற மனித பண்பிற்கு முதலிடம் கொடுத்து நாட்டார் தீர்ப்பளித்துள்ளது அறத்தின் சிறப்பைக் குறிக்கிறது.

இவர்கள் கல்வெட்டின் தொடக்கத்தில் அறம் வளர, புகழ் வளர, கலி மெலிய செங்கோலையே தெய்வமாகக் கொண்ட நாட்டார் என்று குறிக்கப்படுவது இவர்களது தீர்ப்புக்கு மிகவும் பொருத்தமாகத் திகழ்கிறது. இதுபோன்ற வரலாற்றுச் சிறப்பு வாய்ந்த பல செய்திகள் கல்வெட்டுகளில் இடம் பெறுகின்றன.

1. ஸ்வஸ்தி ஸ்ரீ இலங்கையும் யிரட்டபாடியுங் கொண்டு பேராற்றங் கரைக் கொப்பத்தாஹவமல்லனை புறங்கண் டவன் ஆனையும் குதிரையும் பெண்டிர் பண்டாரமுங் கொண்டு விஜையாபி ஷேகஞ் செய்து வீரஸிம்ஹாஸனத்து வீற்றிருந்தருளிய கோப் பரகேசரிவந்மரான உடையார் ஸ்ரீராஜேந்த்ரதேவர்க்கு யாண்டு அஞ்சாவது ஸ்ரீ உத்ஸவதேவி ப ந்தா (ண)ம் பபாதுவ ண்ண ஸநோத்ஸவஞ்வ வ யோம ஹி தா க்ஷா ய வி த்ரேயஷ்ய ஸாஸநம் ஸ்ரீ ஹ

2. ஸ்ரீதேவிக்கு மக்கள்ளாகி யறம் வளா புகழக்க கலிமெலியச் செங் கோலே தெய்வமாகத் திசையனைத்துஞ் செவிடு படாமைச் சிதியமேழி யஉசம் இனிது நடாத்து . . ஸ்ரீராஜேந்த்ர வித் ரேளிப் பெருக்காளரோம் பங்களநாட்டுத் தெற்கில் வகைச் செளுறூர் நாடான புதநலப்பாடி நாட்டுக் கநாவுரத்திருக் கும் வெள்ளாளன் தருப்பேறுடையான் தாழி கொன்னவஞ என் மகன் சங்காத்தடியனும் என் மகன் பெரியானும் தடு படுக்கிறடத்துத் தம்பி

3. யை தமையன் அரிசப்பட்டு அடித்தான் அடிக்க தம்பியும் தெமையனை யெதிரே யடித்தான் தம்பியடிச்ச அடியிலே தமையன் பட்டான் என்று வந்து சொல்ல உனக்கு இவ்விருவருமல்லது மக்களுளரோவென்று கேட்க மற்று மக்களாருமில்லை இவர்கள் தாயுநானுமேயுள்ளோமென்று சொன்னான் சொல்ல அதீந்தானுண்டோவென்று கேட்க அதீமுமில்லை என இனென்ன ஒரு குடிக்கெடானமையிலும் இவர்களை ரக்ஷிப் பாரிலாமையி

4. லும் அஜீம் இலாமைலுந் திருத்தாமரைப் பாக்கத்துத் திருவமநி ஸ்ரமுடைய ஊஹாதேவர்க்குத் திருனந்தா விளக்காக அரை விளக்கு வைத்து வயஸ்ரிணதை சென்ற தாயையுந் தமப்பனை யும் ரக்ஷிப்பானக ஊஉஉ நோக்கி இவனிதற்குப் படவேண்டா வெந்று பேருக்காளர் வியித்தமையில் இது சுத்த பட்டிகை யாகவும் இது நோக்கியவனுக்கு தேவை புகுதாததாக்கவும் விதித்தோம் பெருக்காளரோம் இதனை அன்றேன்று எடுத்து கட்டுவான் பெரிய நாட்டுக்குப் பிழைத்தான் இவை சித்திர

5. மேழி நாட்டுப் பட்டனே என்னெழுத்து இப்படியறிவேன் . மண்டை குளநாட்டுக்கு ராப்பாக்கத்து வெள்ளாளன் பிரம் பனூர் கிழவன் கேசன் படியன்னேன் இப்படி யறிவேன் இலத்தூர்ச் சேக்கிழான் அத்திமல்லன் சீராளன்னேன் இப்படி அறிவேன் தாமரைப் பாக்கிழான் ஆற்றி ஆடவலான்னென் இப்படி யறிவேன் வயல்லாமூர் வெள்ளாளன் இலங்காடு உடையான் குட்டேறன் பொற்காளியேன் இப்படி அறிவேன் கீரனூர்ச் சாவலகாடாடி மணிகண்டனேன் இப்படி அறிவேன் பாடா நாட்டு

6. கங்கக்நல்லூர் மரவேட்டன் இருங்கோளனென் இப்படி அறி வேன் தச்சத் தழானுபாடி வெள்ளாளன் வாரானூர் உடை யான் நக்கன் பெரியனேன் இப்படி அறிவேன் களிக் கொற்றப் பாடி சாதந்தமுழான் குட்டேறனேன் இப்படி அறிவேன் சொமாசிபாடி வெள்ளாள தனந்தபிருதி வலி கருமாணிக்க னேன் இப்படி அறிவேன் பரமண்டலத்து பள்ளிகள் நாடு செவரன் சித்திரமேழிநடு உடையானென் இவ்வகை பட் டாங்கு சொல்ல எழுதினேன் தச்சுஊர் ஸ்ராஹ்மணன் ஹாரத் வாஜி திருவழுதி நாடனேன் இவை

7. என்னெழுத்து



## இது யாருடைய காசு?

இது ரோமானியர் காசு. தமிழ்நாட்டில் கிடைத்தது. சங்ககாலத்தில் தமிழ்நாட் டிற்கும் ரோமானியநாட்டிற்கும் வாணிகத் தொடர்பிருந்தது என மேலைநாட்டு நூல் களும் சங்க இலக்கியங்களும் தெளிவாகக் குறிக்கின்றன. இதுபோன்று தங்கத் தாலான ஏராளமான ரோமானிய காசுகள் தமிழ்நாட்டில் கிடைத்துள்ளன.

தொல்லாய்வு :

# வடமதுரை

அ. அப்துல் மஜீத்

*(சென்ற இதழ் 22-ஆம் பக்கத்தில் குறித்துள்ள வடமதுரையைப் பற்றிய செய்தி)*

பழைய கற்கால கருவிகள் செங்கற்பட்டு மாவட்டத்தில் குறிப்பாக சில இடங்களில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. இவ்விடங்களில் ஒன்று வடமதுரை. இவ்வடமதுரை கோர்த்தலையார் என்னும் ஆற்றின் கிளை ஆகுன ஆரணி ஆற்றின் கிழக்குக் கரையில் ஒரு சிறிய ஊராக இன்று காட்சி அளிக்கிறது. இவ்வாற்றங்கரையின் ஓரங்களில் மிகுதியான அளவில் கூழாங்கற்கள் உள்ளன. இவற்றிற்கிடையில்தான் பழைய கற்கால மனிதன் பயன்படுத்திய ஏராளமான கற்கருவிகள் கண்டு பிடிக்கப்பட்டுள்ளன. சாதாரணமாகச் செல்லும் பொழுதே கணக்கற்ற பழைய கற்காலக் கருவிகளை இங்கு சேமிக்கலாம். இவ்வாற்றங்கரையை உற்று நோக்கினால் பழங் கற்கால கருவிகள் நில அடுக்குகளில் புதைந்து இருப்பதைக் காணலாம். இக் கற்கருவிகளில் குறிப்பிடத்தக்கவை கைக்கோடரிகளாகும். இவ்வகையைச் சார்ந்த கைக்கோடரிகள் பிரஞ்சு நாட்டின் வடபகுதியிலுள்ள அபவில்லி என்ற இடத்தில்முதலில் கிடைத்ததால் இவை அபவில்லியன் மரபைச் சார்ந்தவை என தொல்லியல் வல்லுநர்கள் அழைக்கின்றனர். இக்கைக்கோடரிகள் பேரிக்காய் போன்ற வடிவமுடையதாய் இருக்கும். ஒரு புறம் கையால் பிடிப்பதற்கு ஏற்றவாறும், மற்றொரு புறம் கூர்மையாகவும் அமைந்திருக்கும். கைப்பிடிக்கும் பாகம் சில்லுகள் பேர்த்தெடுக்கப்படாமல் சொர சொரப்பாக இருக்கும். இக்கைக்கோடரிகள் வடமதுரையில் வாழ்ந்த பழைய கற்கால மனிதனின் எல்லா வேலைகளுக்கும் பயன்பட்டன. கைப் பிடிக்கும் பாகம் நசுக்குவதற்கும், கூர்மையான பக்கங்கள் விலங்குகளின் தோலை உரிப்பதற்கும், வெட்டுவதற்கும் பயன்பட்டன என்று கருதப்படு கிறது. இக்கைக் கோடரியேயன்றி கிழிப்பான்களும், சில்லுகளால் செய்யப் பெற்ற கற்கருவிகளும் இங்கு கண்டு பிடிக்கப்பட்டுள்ளன இக்கிராமத்தைச் சார்ந்த மக்கள் அங்குள்ள ஏரியின் அருகே மண் வெட்டியெடுத்த பொழுது அதிக அளவில் பழைய கற்கால கருவிகளைக் கண்டெடுத் துள்ளனர். இன்றும் இந்த ஏரிக்கரையின் அருகில் ஏராளமான கற் கருவிகள் கிடைப்பது குறிப்பிடத்தக்கதாகும். இங்கு கண்டெடுக்கப்பட்ட கற்கருவிகளை ஆதாரமாகக் கொண்டு மனிதன் சுமார் 75,000 ஆண்டு களுக்கு முன்பே இவ்வூரில் வாழ்ந்திருக்கிறான் என்று தொல்லியல் வல்லுநர்கள் கருதுகின்றனர். இதிலிருந்து 75000 ஆண்டுகளுக்கும் முன்னரே தமிழகத்தில் மனிதன் வாழ்ந்திருக்கிறான் என்று திட்டவட்ட மாகக் கூறலாம்.

## சோழர் ஆட்சியில் பெண் அதிகாரிகள்

*இராஜேந்திரன் கல்வெட்டு*

*.....உடையார் ஸ்ரீராஜராஜதேவர் நம்பிராட்டியார் தந்திசக்திவிடங்கியரான ஸ்ரீஒலோகமாதேவியார் ராஜேந்திரசிம்மவளநாட்டுப் பொய்கைநாட்டு திருவையாற்றுப்பால் நாம் எடுப்பித்[த] திருக்கற்றளி ஒலோகமாதேவீச்சுரம் உடைய மகாதேவருக்கும் ஒலோகவிடங்கதேவருள்ளிட்ட திரு மேனிகளுக்கும் செய்வித்த பொற்கொள்கை முதலிய உள்ள திருவா பரணங்களும் கல்லிலே [வெ]வட்டிவிக்க வென்று உடன்கூட்டத்து அதி காரம் செய்கின்ற கோவலூருடையான் காடன்னூற்றென்மறையும் அதிகாரிச்சி எருதந்தஞ்சரமல்லியையும் அருளிச்செய்ய [கல்]வெட்டின படி......* S.I.I. vol. V 521

## மற்றோர் பெண் அதிகாரி

*இராஜாதிராஜன் கல்வெட்டு*

*......திருவையாற்று ஒலோகமா[தே]வீச்சுர[ம் உடை]யாருக்[கு] அ[ணு]த்தர பல்லவரையனும் அதிகாரிச்சி சோமயன் அமித்தரவல்லியும் ஸ்ரீகாரியம் நந்தலூ(ர்)ருடையான் ......* S.I.I. vol V 520

---

# நின்றசீர் நெடுமாறனின் கல்வெட்டு

*திருஞான சம்பந்தரின் சமகாலத்தவனும், நெல்வேலி வென்ற நெடுந்தகை என்று பெயர் பெற்றவனுமான பாண்டிய மன்னனின் கல்வெட்டு கிடைத்து உள்ளது. மதுரைமாநகரில் வைகைக்கரையில் இக் கல்வெட்டு கிடைத்தது. வைகையாற்றில் ஒரு மதகுவைத்து, ஒரு வாய்க் கால் வெட்டியதை இக்கல்வெட்டு குறிக்கிறது. அம்மதகுக்கு அரிகேசரி என்று தன்பெயரை இம்மன்னன் இட்டதையும் இக்கல்வெட்டு குறிக்கிறது. இம்மன்னன் சேந்தனின் மகன் என்றும், 50 ஆண்டுகள் ஆண்டான் என்று அறிகிறோம். இவனே பாண்டிக்கோவையின் பாட்டுடைத் தலைவன். சம்பந் தரின் சமகாலப் பாண்டிய மன்னனின் கல்வெட்டு கிடைத்துள்ளது. சிறந்த வரலாற்றுச் செய்திகளையெல்லாம் கொடுக்கும். இதைப் பற்றிய விரிவான கட்டுரையை "ஆராய்ச்சி"- April 1974-வது இதழில் காணலாம்.*

# சங்ககால அந்தாதி இலக்கியம்

இரா. நாகசாமி.

தமிழ் இலக்கிய மரபில் ஒரு வகைக் தொடர் நிலைப்பாடலை அந்தாதி என்று அழைப்பது மரபு. இவ்வந்தாதிச் செய்யுட்கள் தமிழில் எப்பொழுது தோன்றின? அந்தாதி செய்யுட்கள் காலத்தால் பிற்பட்டவை என்பது சில வரலாற்று ஆசிரியர்களின் முடிவு. திட்டமாகத் தெரிந்த ஆசிரியர்களின் அல்லது நூல்களின் காலத்தைக் கொண்டுதான் அதைக் கணிக்க முடியும்.

'அந்தாதி' முறை வைணவ ஆழ்வார்களால் மிகச் சிறப்பாக கையாளப்பட்டது முதலாழ்வார் மூவர் பாடல்களும் அந்தாதிகளாகும். திருமழிசையாழ்வாரும் அந்தாதி பாடியுள்ளார். முதலாழ்வார் மூவரும் கி.பி. 6, 7-ஆம் நூற்றுண்டைச் சார்ந்தவர்கள் என்பர். ஆதலின் தமிழில் அந்தாதி கி.பி. 6-ஆம் நூற்றுண்டில் வழக்கில் வந்துவிட்டது.

ஆயினும் தாண்டக அரசரான அப்பரும், செந்தமிழால் இசை பரப்ப வந்த சம்பந்தரும் 'அந்தாதி'யை தங்கள் பதிகங்களில் கையாளவில்லை.

முதல் ஆழ்வார் மூவர்களில் அந்தாதியின் ஒரு செய்யுளின் இறுதிச் சொல் அடுத்த செய்யுளின் முதற் சொல்லாக வருகிறது. அதே போன்று முதல் பாடலின் தொடக்கச் சொல் இறுதிப் பாடலின் இறுதிச் சொல்லாகவும் வருகிறது. ஆதலின் இதையே 'அந்தாதி' இலக்கணம் என இப்பொழுது பொதுப்படையாகக் கருதுகின்றனர்.

அதன் இலக்கணம் காண்போம்.

அந்தம் முதலாகத் தொடுப்பது அந்தாதி - யாப்பருங்கலக் காரிகை 17.

அடிதொறும் ஓரடி இறுதிக்கண் நின்ற எழுத்தானும், அசையாலும், சீராலும், அடியாலும் மற்றையடிக்கு ஆதியாகத் தொடுப்பது அந்தாதித் தொடை. குணசாகரர் உரை.

அடியுஞ் சீரும் அசையும், எழுத்தும் முடிவு முதலாக செய்யுள் மொழியின் அஃது அந்தாதி தொடை.

(மாயேச்சுரர். யா. காரிகை. மேற்கோள். பக்கம். 50)

ஆதலின் முடிவு முதலாக வருவது அந்தாதி என்பது தெளிவு. இது ஒரு செய்யுளின் இறுதியில் உள்ள எழுத்தாகவோ அல்லது அசையாகவே

இருக்கலாம். சொல்லாகவோ அல்லது அடியாகவோ இருக்கலாம். எது வாயினும் அந்தாதியே.

சங்க காலத்திலேயே அந்தாதித் தொடை வழக்கிலிருந்திருக்கிறது. சங்க நூல்களில் முருகாற்றுப்படை, பரிபாடல் இவ்விரு பாடல்களையும் பற்றி கருத்து வேறுபாடு உண்டு. ஆனால் பதிற்றுபத்து என்னும் நூலைப் பற்றி கருத்து வேறுபாடு இல்லை. பதிற்றுப்பத்திலும், பதிகங்கள் காலத் தால் பிற்பட்டவை என்பார் உண்டு. ஆனால் மற்றவை சங்கப் பாடல்களே என்பதில் ஐயமில்லை.

பதிற்றுப் பத்தில் நான்காம் பத்து அந்தாதியாக அமைந்துள்ளது. ஒவ்வொரு பாடலின் இறுதியில் உள்ள சொற்களும் அடுத்த பாடலின் தொடக்கமாக அமைந்துள்ளதைக் கீழே காணலாம்.

| செய்யுளின் இறுதி | அடுத்த செய்யுளின் தொடக்கம் |
|---|---|
| மாண்டனை பலவே | மாண்டனை பலவே |
| இறும்பூதாற் பெரிதே | இறும்பூதாற் பெரிதே |
| ஒருஉப நின்னே | ஒரு உப நின்னை |
| புரைசால் மைந்தநீ யோம்பல் மாறே | புரைசால் மைந்தநீ யோம்பல் [மாறே |
| வீயா யாணர் நின்வயி னானே | வீயா யாணர் நின்வயி னானே |
| வாழ்கநின் வளனே | வாழ்கநின் வளனே |
| உலகத் தோர்க்கே | உலகத் தோரே |
| பிறர்க்கென வாழ்திநீ யாகன் மாறே | பிறர்க்கென வாழ்திநீ யாகன் [மாறே |
| போர்நிழற் புகன்றே | போர்நிழற் புகன்ற. |

இது அந்தாதி என்பதில் ஐயமிருக்க முடியாது. இதில் ஒரு சொல், இரு சொற்கள், மூன்று சொற்கள் அல்லது அடி முழுமையும் அடுத்த செய்யுளின் முதலாக வருகின்றதைக் காண்கிறோம். ஆனால் முதற் பாடலின் தொடக்கம் இறுதிப் பாடலின் இறுதியில் வரவில்லை.

முதல் பாடலின் தொடக்கம் இறுதிப் பாடலின் இறுதியாக ஆழ்வார் பாடல்களின் வருகின்றன, எனக் கண்டோம். இவ்வாறு வரும் அந்தாதி களை மண்டல அந்தாதி என்பர். பதிற்றுப் பத்தில் நான்காம் பத்தாகிய அந்தாதி அவ்வாறு அமையவில்லை. ஆயினும் அது அந்தாதி என்னும் பிரிவையே சாறும். ஆதலின் அந்தாதி சங்க காலத்திலேயே இருந்தது என்பது இதனால் தெளிவு. மண்டல அந்தாதி வகை காலத்தால் பிற் பட்டது எனக் கொள்வதில் தவறில்லை.

நூல் ஆய்வு :

# ஐவர் ராசாக்கள் கதை

நாட்டுப்பாடல் தொகுதியில், மதுரைப் பல்கலைக் கழகம் பதிப்பித்துள்ள "ஐவர் ராசாக்கள் கதை" பாண்டியன் குலசேகரனின் பிறப்பு, அவன் வெற்றிகள், அவன் நாட்டியப் பெண் ஒருத்தியை நயந்தது, வள்ளியூரில் கோட்டை எடுத்தது, கன்னடியருடன் இட்டபோர், கன்னட அரசன் மகள் அவன் மீது கொண்ட காதல், அவன் தோற்று இறுதியில் இறக்க அவள் தீப்பாய்வது ஆகியவற்றை மையமாகக் கொண்டது. இப்பாடல் 5,000 அடிகளுக்கும் மேல் அழகிய தமிழில் நாட்டுப் பாடலாக அமைந்துள்ளது. நயம் மிகுந்த பாடல்கள். இப்பாடலின்படி இக் கதையின் தலைப்பு "இராசா ஐவர் கதை" என்பதாகும். இவ்விலக்கியத்தை இப் பாடல் "நாட்டுக்கதைப் பாடல்" எனக் குறிக்கிறது. இக்கதையுடன் தொடர்பு கொண்ட "வீணுதிவீணன் கதை" என்னும் சிறிய கிளைக் கதையும் இறுதியில் சேர்க்கப் பட்டுள்ளது.

இந்நூலை அரும்பாடுபட்டுத் தேடி ஆராய்ச்சிக் குறிப்புகளுடன் பதிப்பித்து உள்ளார் பாளையங்கோட்டை 'ஆராய்ச்சி' ஆசிரியர் நா. வானமாமலை அவர்கள். நாட்டுப் பாடல் இலக்கியத்துக்கு அருந்தொண்டாற்றிவரும் அவர் நமக்குக் கொடுத்துள்ள இந்நூல் ஒரு பெரும் வரலாற்றுப் பொக்கிஷம். நூலை ஆசிரியர் சிறந்த தற்கால ஆராய்ச்சி மரபில் பதிப்பித்துள்ளார். முதல் பகுதியில் இப்பாடல் எழுதியிருந்த ஓலைச்சுவடி எவ்வாறு கிடைத்தது என சுவடியின் வரலாற்றைச் சுவையுடன் கூறுகிறார். பின்னர் கதைச் சுருக்கம் இடம் பெறுகிறது. இக்கதையின் தலைவன் குலசேகர பாண்டியனையும் அவன் வாழ்ந்த காலத்தையும் அறிய வரலாற்றுப் பின்னணியை மிகவும் தெளிவாகக் குறிப்பிட்டுள்ளார். வானமாமலை எவ்வளவு சிறந்த வரலாற்று ஆசிரியராகத் திகழ்கிறார் என்பதற்கு இப்பகுதி சான்று. இக்கதை யார் காலத்தில் எழுந்திருக்கக் கூடும்? இதில் மூலக்கதை எது? அவ்வப்போது பின்னர் இணைக்கப்பட்ட பகுதிகள் யாவையாக இருக்கலாம்? இவற்றில் வரலாற்றுப் பாத்திரங்கள் யாவை? கற்பனைப் பாத்திரங்கள் யாவை? என புலமை மிகுந்த ஆராய்ச்சியுடன் வெளிப்படுத்துகிறார். கல்வெட்டுகளிலிருந்து ஆங்காங்கே சான்று கூறுவது ஆய்வுப்பாதையின் சீர்மையைக் காட்டுகிறது. பதிப்பாசிரியரின் முன்னுரை இவ்வளவு சிறக்க அமைந்துள்ளதைக் கண்டு போற்று கிறோம். அது மட்டுமல்ல. பாடல்களில் பல இடங்களில் மிகவும் பயனுள்ள விளக்கங்களும் குறிப்புகளும் கொடுக்கப்பட்டுள்ளன இவை பதிப்பு முறை எவ்வாறு இருக்கவேண்டும் என்பதற்கு எடுத்துக்காட்டுக்கள்.

கதையின் சுவையாலும், நாட்டிலக்கிய நயத்தாலுமே இன்று வரை எஞ்சி உள்ள இக்கதைப் பாடல் நமக்கு வியப்பைத் தருகிறது. இப்பாடலின் பெரும் பகுதி நாயக்கர் காலத்திற்கும் முன்பே திகழ்ந்த சமுதாயத்தையே சித்தரிக்கிறது.

இதில் பல பாத்திரங்கள் 14-ஆம் 15-ஆம் நூற்றாண்டுக் கல்வெட்டுகளில் குறிக்கப்படுகின்றனர் தென்காசி விசுவநாதர் கோயிலில், சுப்ரமணியர் ஆலயத்தில் உள்ள ஒரு கல்வெட்டு, பாண்டிய மன்னன் ஸ்ரீவல்லபனுடைய மூன்றாவது ஆட்சி ஆண்டைக் குறிக்கிறது. இம்மன்னன் 'ஜடாவர்மன்' என்றும், 'இறந்த காலம் எடுத்த பெருமாள்' என்றும் குறிக்கப்படுகிறான். ஐவர் இராசாக்கள் கதையின் பாட்டுடைத் தலைவன் 'இறந்த காலம் எடுத்த பெருமாள்' (வரி 215) என்றும்,

'வல்லப மாறன்' (வரி 283) என்றும் குறிக்கப்படுகிறான். இக்கல்வெட்டின் காலம் (சகம் 1459) கி.பி 1537. இதே பெயர் கொண்ட சுமார் 30 ஆண்டுகட்டுப் பின்னர் ஆண்ட அழகன் பெருமாள் அதிவீரராம ஸ்ரீவல்லபன் என்பவனுக்கு வாயிற் காரிய மாகக் காலிங்கராயன் என்பவன் ஒருவன் இருந்திருக்கிறான். இப்பாடலில் குலசேகரனின் மந்திரி, காலிங்கராயன் என்பவன் குறிக்கப்படுகிறான் இது போன்று இப்பாடலில் வரும் பல பாத்திரங்கள் கல்வெட்டுகளில் குறிக்கப்படுவது சிறப்பாகும்.

இக்கதையில் இடம் பெற்றுள்ள பல செய்திகள் எவ்வாறு வரலாற்றுக்குச் சிறந்த செய்திகளை அளிக்கின்றன என ஆய தனியாக ஒரு கட்டுரை எழுதலாம். அவ்வாறு விரைவில் ஒரு கட்டுரை கல்வெட்டில் இடம்பெறும். இந்நூலைக் கல்வெட்டு பெரிதும் வரவேற்கிறது.

இரா. நா.

ஐவர் ராசாக்கள் கதை : பதிப்பாசிரியர்; நா. வானமாமலை, எம்.ஏ. எல்.டி., வெளியிட்டோர் : மதுரைப் பல்கலைக் கழகம் 1974, விலை. ரூ. 7-50.

---

## கல்லணை கட்டியது கரிகாலனா?

கல்லணை கட்டினது பராந்தகசோழ மகாராசாவினுடைய குமாரன் கரிகாலசோழ மகாராசா அவர்கள் கட்டினது. அது யெப்போவென்னில் கலியுகம் பிறந்த ௪௲ தொளாயிரத்துத் தொண்ணூறும் வருஷத்தில் கரிகாலசோழ மகாராசா பிறந்தது. அவருக்கு ரு-ம் அஞ்சாம் வருஷத்தில் பட்டம் கட்டினார்கள். அதன்பிறகு பொன்னியாறு கரைகண்டான். ௫௰௩-ம் அம்பத்துமூணும் வருஷம் காவேரி கரைகண்டு கல்லணையான அணை(க்)கட்டை(க்) கட்டினான்.

இதற்கு. கல்லணை கட்டச்சே சொன்ன வெண்பாவும், அந்த கரிகாலசோழ ராசா கலியுகத்தில் பிறந்த பிரமாணத்துக்கும், அவர் ராச்சியபாரம் பண்ணின வருஷத்துக்கு பிரமாணமும் அதுக்கு ஆதரவு அவர் நாளையிலே சொன்ன வெண் பாவும் எழுதியிருக்கிறது.

### வெண்பா

தொக்க (க)லியின்[௪] (தொ)ளாயிரத்துத் தொண்ணூறில்
மிக்க கரிகால வேந்துதித்து(ப்)-பக்கம்
அலைக்குந் திரைப் பொன்னி யாறுகரை கண்டான்
மலைக்குநே ரானபுய மன். (௧)

[கர்னல் மெக்கன்சி சேகரித்த செய்திகளில் இதுவும் ஒன்று. இதில் குறிக்கப்பட்டுள்ளவன் முதல் இராஜராஜசோழனின் அண்ணன் ஆதித்தகரிகாலனாகும். இதில் குறிக்கப்பட்டுள்ள ஆண்டு ஒத்து வரவில்லை]

Triennial Catalogue of MSS. 1916—17 to 1918—19, V. III Part 2, page 919.

# தாலாட்டும் தாயக வரலாறும்

மா. சந்திரமூர்த்தி, எம். ஏ.,
பதிவு அலுவலர்.

தமிழகத்துத் தாய்மார்கள் பாடும் தாலாட்டுப் பாடல்கள் இனிமையான தமிழில் அமைந்து சிறந்த இலக்கியமாகத் திகழ்கின்றன. இவற்றில் ஓசை நயமும், பொருளழகும் மிளிர்கின்றன. இத்தாலாட்டுப் பாடல்கள் சமூக வாழ்க்கையுடன் மிகவும் தொடர்புடையவை. இவை சமூக, பொருளாதார, பண்பாட்டியலை படம் பிடித்துக் காட்டுவனவாக அமையும். அப்பாடல்கள் குழந்தையின் பிறப்பையும், செல்வச் சிறப்பையும், குலப் பெருமையையும், உறவையும், ஊர் சிறப்பையும் கூறுவனவாக அமைகின்றன.

எடுத்துக் காட்டாக தூத்துக்குடித் துறைமுகப் பகுதியில் பாடப்படும் தாலாட்டுப் பாடலையும் அப்பாடலில் எதிரொலிக்கும் பண்பாட்டுச் செய்திகளையும் காண்போம்.

துறைமுகத்தின் ஒரு பகுதியில் முத்துக்குளிப்போரின் குடிசைக் காட்சி அளிக்கிறது. முத்துக்குளிக்கச் சென்ற கணவன் வீடு திரும்பவில்லை. அந்திப்பொழுது நெருங்கிவிட்டது. நேரம் ஆக ஆக அவள் மனம் சலனமடைகிறது. அந்தச் சமயத்தில் குழந்தையும் அழுகிறது. குழந்தையின் அழுகுரலைக் கேட்ட தாய் குழந்தையை வாரியெடுத்து, மார்போடணைத்து, உச்சிமுகந்து, முத்தமிட்டு பாலூட்டுகிறாள். பிறகும் குழந்தை அடம் பிடித்து விடாப்பிடியாக அழுகிறது. ஒருவேளை குழந்தையை அத்தையோ அம்மானோ அடித்து விட்டார்கள் போலிருக்கிறது, அவர்களை ஆக்கினை செய்யவேண்டும் என எண்ணுகிறாள். தாய் குழந்தையை தொட்டிலில் இட்டு தூங்கச் செய்கிறாள். குழந்தை தூங்காமல் துருதுருவென்று விழித்துக் கொண்டிருக்கிறது. பாலமுதூட்டியும் தூங்காத குழந்தையை இசையால் அமுதூட்டி தூங்கச் செய்ய தாய் தாலாட்டுப் பாடுகிறாள். இசையால் உறங்கச் செய்வது தாய்குலத்தின் மரபாகும். தாலாட்டு பாடும்பொழுது அவள் ஒரு கணம் கவிஞளாகவே மாறிவிடுகிறாள். அவளது உள்ளத்தில் எண்ண அலைகள் எழுகின்றன. அவை கவிதை ஊற்றாகச் சுரக்கின்றன. அப்பாடலில் கருத்தும் கற்பனையும் கலந்த அவளது உள் உணர்ச்சிகள் சொல்லோவியமாக மலர்கின்றன.

அத்தாலாட்டுப் பாடலில் தாய்ப் பாசம் மிளர்கிறது. குலஒழுக்கம் புலனாகிறது. அவளது முன்னோர்கள் வழிவழியாக அயல்நாடுகளில் செய்துவந்த கடல் வாணிகத் தொடர்பு தெளிவாகிறது பண்டையத் தமிழகத்தின் வளமும் செழிப்பும் அவளது வாய்மொழி இலக்கியத்தில் வெளிப்படுகிறது.

பாமரர் பாடல்களில் அவர்களது உறவு முறையும், தொழிலும் புகழ்ந்து பாடப்படுவது மரபு. வங்காளத்தில் ''பாரோ மாசி'' என்ற நாடோடிப் பாடல் வகை உள்ளது. அதில் பன்னிரண்டு மாதங்களிலும் நிகழும், கால மாறுபாடுகளையும் உழவு வேலைகளையும் ஒரு கதையோடு தொடர்பு படுத்திப் பாடுவர் 1 வங்காளத்துப் பாரோ மாசியைப் போல, தாலாட்டிலும் வருங்காலத்தில் தன் மகன் ஒவ்வொரு மாதத்திலும் செய்யவேண்டிய கடமைகளைத் தாய் அறிவுறுத்துவாள். தாயின் குடும்பம் எத்தொழிலைச் செய்து வாழ்கிறதோ அத்தொழில் தாலாட்டில் பெருமையாகக் கூறப்படுவது வழக்கம் அவ்வாறு. இப்பகுதியில் வாழ்வோருக்கு முத்துக் குளித்தலே குலத்தொழிலாகும். அத்தொழிலை நம்பித்தான் அவர்களது வாழ்க்கை

நடக்கிறது. அத்தொழிலில் நாட்டம் கொண்டுள்ளாள் அக்குழந்தையின் தாய். தன் பிள்ளையும் ஒரு காலத்தில் முத்துக் குளிக்கும் தொழிலில் சிறந்து விளங்குவான் என கனவு காண்கிருள். அவளது கற்பனை சிறகடித்துப் பறக்கிறது. அவளது உள் உணர்ச்சிகள் பாடலாக மலர்கின்றன. ''மூணு கப்பல் கொடி பிடிக்க, முத்துக் கப்பல் ஓடிவர, மூழ்கிக் குளிச்சி முத்தெடுக்கும் மூத்தவனே கண்ணுறங்கு'' என்று அவளது கனவலைகள் இன்னிசையாக எழுகின்றன. முத்துக்குளிக்கும் தொழிலைக் குலத்தொழிலாகக் கொண்ட தாய், தனது மகனுக்குக் கொற்கை, குலசேகரப் பட்டினம், தூத்துக்குடி ஆகிய துறைமுகத்தின் சிறப்பையும் முத்துக்குளிக்கும் விதத்தையும் வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யும் முறையையும், தென்மதுரை வீதிகளில் விற்பனைச் செய்யும் பாங்கையும் பாடுகிருள்.

தாய் பாடுகிருள் குழந்தை உறங்குகிறது குழந்தையை உறங்கச் செய்த தாலாட்டுப் பாடலை நோக்குவோம்.

ஆராரோ ஆரிரரோ
ஆராரோ ஆரிரரோ

ஆறோ பெருகி வர
அலைகடலும் பொங்கிவர
அலைகடலின் கரையினிலே
அராபிய கப்பல் வரும்—அதில்
அழகான குதுர வரும்—அது
ஆயிரம் வெலை மதிச்சி
ஆணிமுத்து வாங்கிப் போகும்

ரெண்டு கப்பல் கொடி பிடிக்க
ரெட்டை மச்சம் அசைஞ்சு வர
லகுவாக எடுத்த முத்தோ
எளவரசே கண்ணுறங்கு.

கொற்கைத் தொறை முகத்தில்—கண்ணே நீ
கொண்டு வந்த கெட்டி முத்தோ
குலசேகர பட்டினத்தில்—கண்ணே நீ
குளிச்சு எடுத்த முத்தோ

தூத்துக் குடித் தொறை முகத்தில்—கண்ணே நீ
துணிஞ்சு எடுத்த முத்தோ
வங்காளக் கடலிலே—கண்ணே நீ
வாரி வந்த நல்ல முத்தோ
வீதி பெருவழியில்—கண்ணே நீ
வித்து வந்த வங்க முத்தோ

ரோமாபுரி தேசத்திலே—கண்ணே நீ
ரோந்து வந்த பாண்டி முத்தோ
தென்மதுரை வீதியிலே—கண்ணே நீ
தெரிந்தெடுத்த நல்ல முத்தோ

முன்னூறு முத்திலே—கண்ணே நீ
மூழ்கி எடுத்த முத்தோ
நானூறு முத்திலே—கண்ணே நீ
நடந்து வந்த நல்ல முத்தோ

ஐநூறு முத்திலே—கண்ணே நீ

அஞ்சாம வந்த முத்தோ

அறநூறு முத்திலே—கண்ணே நீ
அழகாக வந்த முத்தோ

எழநூறு முத்திலே—கண்ணே நீ
எழிலாக வந்த முத்தோ

மூணு கப்பல் கொடி பிடிக்க
முத்துக் கப்பல் ஓடி வர
மூழ்கி குளிச்சி முத்தெடுக்கும்
மூத்தவனே கண்ணுறங்கு.

அத்தை அடிச்சாளோ
அனிச்சம் பூச்செண்டாலே
அம்மான் அடிச்சானே
ஆணிமுத்துச் சரத்தாலே
அடிச்சாரை சொல்லியழு
ஆக்கினையும் செஞ்சிடுவோம்

பாட்டி அடிச்சாளோ
பால் முத்துச் சரத்தாலே
பாண்டியரே உன் மாமன்
பாலகனே கண்ணுறங்கு2

குறிப்பு: மேற்குறித்த தாலாட்டுப் பாடல் நெல்லை மாவட்டதில் ஏரல் பகுதியில் பாடப்படுகிறது. இப்பகுதி கடற்பகுதியை ஒட்டிய நெய்தல் நிலப் பகுதியாகும். ஏரல், முக்காணி, காயல்பட்டினம், தூத்துக்குடி ஆகிய ஊர்களில் உள்ள பல குடும்பங்கள் முத்துக்குளிக்கும் தொழிலில் ஈடுபட்டுள்ளன. இப்பாடலில் முத்துக் குளிக்கும் தொழிலாலும், கடல் வாணிகத்தாலும் ஏற்படும் சிறப்பைக் காண்கிறோம். இப்பாடல் கி.பி 2-ஆம் நூற்றாண்டில் சிறந்து விளங்கிய கொற்கைத் துறைமுகத் தையும், கி. பி. 12-13-ஆம் நூற்றாண்டில் சிறந்து விளங்கிய குலசேகரபட்டினத் தையும், 20-ஆம் நூற்றாண்டில் துறைநகராக விளங்கும் தூத்துக்குடியைப் பற்றியும் குறிக்கிறது எனவே இப்பாடல் எக்காலத்தில் எழுந்தது என்பதைத் திட்டவட்ட மாக கூறமுடியாது. ஆனால் கொற்கை துறைமுகத்தைப் பற்றியும், அரேபியா, ரோமபுரி ஆகிய அயல்நாடுகளோடு கடல் வாணிகத் தொடர்பு பற்றியும் கி பி 18-ம் நூற்றாண்டில் கால்டுவெல் துரை இப்பகுதியில் செய்த அகழ்வாய்வுக்குப் பிறகுதான் பாமர மக்களுக்குத் தெரிய வந்தது. இச்செய்தி தாலாட்டுப் பாடலில் காணப் படுவது சிறப்பாகவும் வியப்பாகவும் உள்ளது. ஒரு வேளை கி.பி 18-ஆம் நூற்றாண் டிற்குப் பிறகு இப்பாடல் தோன்றியிருக்கலாம்; அல்லது வழிவழியாக ஒரு குலத் தினரால் பாடப்பட்டு வந்திருக்கலாம் அவ்வாறு வழிவழியாக பாடப்பட்டு வந்திருந்தால் இப்பாடல் தமிழ் இலக்கியத்திற்கும், தமிழக வரலாற்றிற்கும் அரிய செய்தியைத் தருகிறது எனக் கருதலாம். மேலும் இப்பகுதியில் ஆய்வு செய்வோர் இப்பாடல் ஒரு இனத்தில் மட்டும் வழங்கப்படுகிறதா? அல்லது எல்லோராலும் பாடப்படுகிறதா என ஆய்வு செய்தல் அவசியமாகும். இது தமிழக மக்களின் தொன்மையான பண்பாட்டைக் கணிக்க அரியதொரு சான்றாக அமையும் எனக் கருதுகிறோம்.

1. நா. வானமாமலை 'தமிழர் நாட்டுப் பாடல்கள், பக்கம் 81 (சென்னை 1964).
2. இப்பாடலைக் கட்டுரை ஆசிரியர்க்கு அளித்தவர் திருமதி சரஸ்வதி அம்மாள், ஏரல், திருநெல்வேலி மாவட்டம்.

# பிள்ளைத் தமிழுக்குப் பட்டயம்

## 'ஓலை நாயகன்'

இறவாத இன்தமிழில் பாடல் பாடிய புலவருக்கு ஊர் அளித்து, பொருள் அளித்து போற்றுவது, சங்ககாலம் முதல் அண்மைக் காலம் வரை ஆண்ட தமிழ் அரசர்களின் மரபாகும். அதுபோன்ற ஒரு அரிய தானத்தை இவ்வோலைப் பட்டயம் குறிக்கிறது. இது அடையாறு ஊ. வெ. சாமிநாதய்யர் நூலகத்தில் உள்ளது. இப்பட்டயத்தை எப்பொழுது படி எடுத்தார்கள் என்ற செய்தி கிடைக்கவில்லை.

சக வருடம் 1569 (1647 கி.பி., திருமலை நாயக்கர் மதுரையில் ஆண்டு கொண்டிருந்த காலம்) மல்லையூர் சிற்றம்பலப் பண்டாரம் என்பவர் இப்பிள்ளைத் தமிழ் பாடினார். இவர் தொண்டை நாட்டு மல்லையூரைச் சேர்ந்தவர். தில்லைநாயகப் பண்டாரம் என்பவரின் மகன் சிறந்த கவி. இவர் பாடிய பிள்ளைத் தமிழின் பாட்டுடைத் தலைவன் மருங்காபுரி வீரபூச்சய நாயக்கர் என்பவர். அவர் இப்பிள்ளைத் தமிழின் நயன் கண்டு சிற்றம்பலக் கவிராயருக்கு இரண்டு ஊர்களைத் தானமாக அளித்தார். தானம் கொடுக்கப்பட்ட ஊர்கள் கண்ணம்மங்கலப்பட்டி, காரைச்சூரான்பட்டி என்பவையாகும் இவ்விரண்டு ஊர்களும் பாடல் பாடிய சிற்றம்பல பண்டாரத்துக்கு சர்வமானியமாக அளிக்கப்பட்டன. இவ்வோலைப்பட்டயம் உண்மை பட்டயமாகவும் வரலாற்றுச் சிறப்பு உடையதாகவும் காணப்படுகிறது இப்பட்டயத்தை முதலில் காண்போம். அதன் வரலாற்றுச் செய்திகளை இறுதியில் காண்போம்.

**பட்டயம் :**

உ

சிவமயம்

ஸ்வஸ்தி ஶ்ரீ சாலிவாகன சகாப்தம் கரு௬௯ இதன்மேல் செல்லா நின்ற சருவசித்து வருடம் வைகாசி மீ ௰ ம் எஉ சுபவாரமும் சுபநட்சத்திரமும் சுபயோக (சுபதின)மும் பெற்ற சுபதினத்தில்

சிஞ்ஞை வாரகுலவரன் அந்தம பிறகண்டன் சம்மடி நாராயணன் உரிகொல் சுரதாணன் பஞ்சவானப் பாவாடையான் ராயார் குத்தமுண்டன் ராசாதிராசன் ராசகெம்பீரன் ராசமார்த்தாண்டன் ராசசிரோமணி மருங்கையம் பதியான் மருவலர்கேசரி ராசவேசியா புயங்கன் பாலாறுடை

யான் 'வேழ மாமலையான் ஒரு சொல் வாசகரான ஸ்ரீ திருமலைப் பூச்சய நாயக்கரவர்கள் குமாரரான வீரப்பபூச்சய நாயக்கர்

மல்லையூர்த் தில்லை நாயக்க பண்டாரத்தின் குமாரன் சிற்றம்பலப் பண்டாரத்துக்கு தாம் தருமசாதனம் கொடுத்தபடி

தாம், பிள்ளைப் பிரபந்தம் பாடி யரங்கேற்றுகையில் சர்வ மாணியமாகக் கட்டளையிட்டது

நம்மிடசீர்மைத் தளவை நாட்டில் அழகிய நாவலூரைச் சேர்ந்த கிராமத்துக்கு எல்லையாவது

அழகிய நல்லூரர் வயலுக்குக் கிழக்கு இதன் வடக்குக் கவிராசன் ஏரித் தென் கலிங்குக்கு தெற்கு இதன் கிழக்கு கொத்தர்குடி கண்மாய் குட்டிவிளாமேட்டுக்கு மேற்கு இதன் தெற்கு அலங்காரபும் கண்மாய் நீர் பிடிக்கும் பாதைக்கும் வடக்கு இதன் மேற்கு சொக்கநாதன் ஏரி வடகலிங் குக் குரங்குப்பட்டரைக்கு வடக்கு இந்த நான் கெல்லைக் குட்பட்ட கண்ணமங்கலப் பட்டியும்

இதன் கிழக்குக் கண்ட கிராமத்துக்கு எல்லையாவது

பெருமாக்கி ஊருணிச் சூலக்கல்லுக்கு கிழக்கு இதன் வடக்கு கொத்தாகுடி வயல் சத்திநாதன் பள்ளச் சூலக்கல்லுக்கு மகவேத நதிக்குந் தெற்கு இதன் கிழக்கு கோவிலான் வயல் பெருவரப்புப் பாதைச் சூலக் கல்லுக்கும் முள்ளிப் பள்ளம் சூலக்கல்லுக்கும் போட்டப் புஞ்சையெல்லைப் பள்ளத்துக்கு மேற்கு சூத்திரம் பட்டி புஞ்சைக்கும் காப்புக்குடி கண்மாய் நீர் பிடிப்பாதைக்கும் வடக்கு இதன் மேற்கு அலங்காரபுரம் வயல் கடைசிக்கு கிழக்கு இந்த நான்கெல்லைக் குட்பட்ட காரைச் சூரான்பட்டி யும்

இந்த இரண்டு கிராமத்தைச் சேர்ந்த ஙு, யூ மாவடை பயம் படுக்கை திட்டுத்திடல் மேல்நோக்கிய மரம் கீழ் நோக்கிய கிணறு ஜலதரு பாசாணம் நிதி நிட்சேப முதலாகியதும் சர்வமானியக் கட்டளையிட்ட படியினலே

சந்திராதித்தவரை புத்ரகோர்பாரம்பரையும் சர்வமாணியமாக ஆண்டனுபவித்துக் கொள்ளக் கடவராகவும்

இந்தத் தர்மத்தைப் பரிபாலனம் பண்ணப் பட்ட பேர்கள் அசுவ மேத யாகம் பண்ணப் பட்ட பலனை யடைவாராகவும்

இதற்கு அகிதம் பண்ணின பேர்கள் கங்கைக் கரையில் காராம் பசுவைக் கொன்ற தோஷத்திற்கு போகக் கடவராகவும்

இந்தப் படிக்கு வாசல் அட்டவணை சிவந்தபாதம்பிள்ளை கையெழுத்து

தருவள ரிந்திரன் வீரப்பூச்சய
சாமி யெங் கோன்
பொருணிறை பிள்ளைத் தமிழ்ப் பிர
பந்தம் புகன்றதற்காய்
அருள் கொள் சிற்றம்பல வாணர்க்குக்
காரைச் சூ ரான்பட்டியும்
வருகண்ண மங்கலப் பட்டியு
மீய்ந்தனன் வாழியவே.

---

இப்பட்டயப் படியின் இறுதியில் மல்லையூர் சிற்றம்பலப் பண்டா ரத்தின் பட்டயம் 258 வருடத்திற்கு முந்தியது என்னும் குறிப்பு உள்ளது. இச்சிற்றம்பலப் பண்டாரம் யார்?

இவரே மிதிலைப்பட்டி சிற்றம்பலக் கவிராயர் எனப் புகழ் பெற்ற வர். சிறந்த தமிழ்க் கவிஞர். பிள்ளைத் தமிழ், கோவை, அந்தாதி, விறலிவிடுதூது, உலா ஆகிய பலதுறைப் பாடல்களும் பாடி புகழ்பெற்ற வர். இப்பாடல்கள் அன்று வாழ்ந்த குறுநிலத் தலைவர்களைப் பற்றியவை ஆதலின் வரலாற்று இலக்கியங்களாகும். அக்கால குறுநிலத் தலைவர் களில் விஜயரகுநாத சேதுபதி, சேலம் கட்டி முதலி, முதலியோர் குறிப் பிடத்தக்கவர்கள்.

சாமிநாதய்யர் நூலகத்தில்' 804 எண்ணிட்ட "சிவந்தெழுந்த பல்லவராயன் உலா" என்னும் சுவடி ஒன்று உள்ளது. நூல் முழுவதும் உள்ளது. "ஆசிரியர் பெயர் தெரியவில்லை" என அட்டவணைக் குறிப்பில் அச்சிடப்பட்டுள்ளது. இவ்வுலாவின் பாட்டுடைத் தலைவன் சிவந்தெழுந்த பல்லவராயன் மல்லையைச் சேர்ந்தவன் என அறிகிறோம். இந்நூலைப் பாடியவரும் முன்னர் குறித்த சிற்றம்பலக் கவிராயரே. சிற்றம்பலக் கவிராயரைப் பற்றிய உ. வெ. சாமிநாதய்யர் அவர்களின் குறிப்பு மிகவும் பயனுடையதாய் உள்ளது. இதை அச்சிட சம்மதித்த உ. வெ. சாமிநாதய்யர் நூலகத்தாருக்கும், சிறப்பாக அதன் உதவிப் பேணுநர் திரு இராமன் அவர்களுக்கும் எமது நன்றி!

**சாமிநாதய்யர் குறிப்பு :**

*சாலி . கருஎ0 மிதிலைப்பட்டிச் சிற்றம்பலக் கவிராயர்*

இவருடைய தந்தையார் பெயர் தில்லையாடியாபிள்ளை என்பது. அவருடைய பிதிரார்சிதமான ஊர் தொண்டை நாட்டிலுள்ள மல்லை யென்பது. ஷெ தில்லையாடியா பிள்ளை யென்பவர் பாலைவனம் ஜமீந்தா ராகிய வணங்காமுடிப் பண்டாரத்தார் ஒருவருடன் அவ்வூருக்கு வந்து அந்த ஜமீன் ஸ்தானதிபதி வேலையில் இருந்தார். அவருக்கு நடராஜ மூர்த்தியினிடத்து அன்பு மிகுதியாக இருந்ததைப் பற்றி இவருக்கு இப் பெயர் இடப்பட்டது. இவருடைய ஆசிரியர் சதாசிவர் என்பவர். சதா

சிவதேசிகர் என்பவர் வைத்தியநாத தேசிகருடைய புத்திரர். அது பின் வரும் பாடலால் விளங்குகின்றது.

கூடுஞ்சபையிற் கவிவாணர் தங்களைக் கோளரி போற்
சாடுஞ் சதாசிவ சற்குரு பாற்றமிழ் தானுங்கற்றுப்
பாடும் புலவர்களானோரும் செம்மல் பட்டியெனும்
காடுஞ் செடியும் இலக்கணங் காவியம் கற்றதுவே.

[இலக்கண விளக்கப் பதிப்புரை ௬ ம் பக்கம் பார்க்க]

இவருடைய காலம் சாலிவாகன சகாத்தம் . . . என்று வேங்கட நாயக்கர், கொடுத்த ஓலைப் பட்டயத்தாற்றெரிகின்றது. சதாசிவ சற்குரு வென்றது இலக்கண விளக்கம் வைத்திய நாத தேசிகரின் புத்திரரை.

பாலைவனம் ஜமீன்தாராகிய அருணசல வணங்கா முடியார் புத்திர ரான ஆண்டவராய வணங்காமுடிப் பண்டாரத்தார் மீது சில பிரபந்தங் களும் தனிப்பாடல்களும் செய்தனர். அவர் யானை முதலிய பரிசுகள் அளித்தார் (யானை கட்டிய கல் இவர் வீட்டுக்கு மேற்கில் இன்றும் காணப்படுகிறது. சிவிகை தண்டிகையுமுண்டு) அப்பால் சேது சமஸ் தானம் சென்று இரகுநாத ஸேதுபதியின் மீது.......... ... .......என்னும் செய்யுளைப்பாடி அவரால் நன்கு மதிக்கப்பட்டு இராசசிங்கமங்கலம் என்னும் கிராமம் பெற்றார். அவ்வூரிலுள்ள ஏரியின் 48 மடைகளுள் ஒரு மடைப் பாய்ச்சல் நிலத்தை இராமநாத ஸ்வாமிக்கும் மற்றொரு மடைப் பாய்ச்சனிலத்தை அக்கிரகாரத்தாருக்கும் தானஞ் செய்து அம்மடைத் தலைப்பில் தம்முடைய பெயரைத் தானஞ் செய்ததற்கறிகுறியாகக் கல்லில் நாட்டியிருக்கின்றனர். அப்பால் அவ்வூரிலேயே இருந்தார். மந்திரியின் முயற்சியால் ரகுநாத சேதுபதி இவரிடம் வந்து ஷை கிராமத்தை வாங்க எண்ணி:-

"சிற்றம்பலவன் திருஞான சம்பந்தன்
உற்ற தமிழுக் குரையாணி--வெற்றிபுனை
தேவரகு நாதனுக்குச் செல்வப் பிதாவெனவே
பூவுலகில் வந்தானிப் போது"

என்னும் வெண்பாவைச் சொன்னார். அதைக்கேட்டுக் கிராமத்தை விரும்பிய குறிப்பை யுணர்ந்து ஷை கிராமப் பட்டயத்தைக் கொடுத்து விட்டு கவிராயர் சொன்ன பாடல்:-

வள்ளைக் கரு மேதிகு தட்டிய தேவைத்தள
வாய்க்கண்மணியே மோகக்
கிள்ளை மொழிச் சியர்வேளே சேதுபதி
ரகுநாதா கேண்மோ நீதான்
எள்ளை நிக ரறியாத வெண்ணையினித் தந்தை
யென்று யென்று லந்தப்
பிள்ளை தனை மறந்தோர்க்குக் கதியுண்டோ
ஓரேழு பிறப்புந் தானே

(தளவாய் சேதுபதி-ரகுநாதர் தந்தை) சேதுபதி யதற்குப் பிரதி யாகக் கொடுத்த கிராமங்கள். க. நாகரத்தினப் பள்ளம் உ. நாரத்தம் பள்ளம் ௩. கொற்றமங்கலம், ச. பிள்ளையார்பட்டி இன்னும் சில, ரு. ரேகனூர்ப்பட்டு சூ. மறவணியேந்தல்.

இவற்றுள் மறவணியேந்தல் என்னும் கிராமத்தைச் சிதம்பர நடேசருக்குக் கொடுத்து விட்டு அடியிற் குறித்த பாடலையும் நடராஜ மூர்த்தியையும் தம்மையும் ஷை யூர்க் கம்மாய்க் கரையில் கல்லிலமைத்த னர். (ஷை ஏந்தல் மிதிலைப் பட்டிக்குக் கிழக்கே 2 மைல்).

தென்னன் விசயரகுநாதச் சேதுபதி
மன்னன் கனகசபை வானருக்கு--இன்னிலமேல்
இந்திரவி யுள்ளமட்டுமே நடக்கக் கற்போட்டுத்
தந்தான் மறவணி யேந் தல்

மருங்காபுரியைச் சார்ந்த செம்மலபட்டியை அடைந்து தாம் அதில் தோரணம் நாட்டி அனுபவிப்பாராய்த் தங்கி அங்குள்ள எல்லாருக்கும் தமிழ் கற்பித்து வந்தனர்; அப்போது மருங்காபுரி ஜமீந்தார் வந்து மாடு மேய்ப்பான் முதல் யாரும் சைவ ஒழுக்கத்தோடு மிக்க படிப்புள்ளவராக இருப்பதை யறிந்து வியந்து புலவனூக்குடி முதலிய சில கிராமங்களை யளித்தனர். தேனி மலையில் முருகக் கடவுளைப் பிரதிஷ்டித்து அக் கோயிலுக்கு ஒரேந்தலை விட்டு விட்டனர். அப்பால் பிரான்மலை சென்று இருந்து கொண்டு ஷை ஸ்தல புராணம் முதலிய நூல்களைப் பாடினர்.

க. பிரான்மலைப் புராணம்
உ. ஷை கழி நெடில் ௩-

அங்கே இறந்து போயினர்.

திருநெல்வேலி சென்று அங்கே இருந்த மூவரையன் என்னும் பிரபுவின் மீது வண்ணமும் விறலிவிடு தூதும் கோவையும் பாடி சில கிராமங்கள் பெற்று ஸ்ரீ வேணுவனலிங்க மூர்த்திக்குக் கொடுத்து விட்டனர்.

சேலத்திலிருந்து கட்டியப்ப முதலியை அடைந்து அவரால் நன்கு மதிக்கப்பெற்று அவர் மகளுக்குத் தமிழ் சொல்லி வைத்தனர்.

பிரான்மலைக்கு மேற்கே 15 மயிலிலுள்ள நத்தம் ஜமீந்தார் மீது வருக்கக்கோவையும் வேறு சில பிரபந்தங்களும் பாடி பூசாரிப்பட்டி என்னுங் கிராமத்தில் இரண்டேந்தல் பெற்றார் அங்கே ஆய்வி ஊருணி என்று ஒன்று வெட்டுவித்து அதன் கரையில் விநயகப் பிரதிஷ்டை செய்வித்து பூசைக்காக ஒரேந்தலை விட்டு விட்டார். ஷை கிராமம் விட்ட தற்குரிய பட்டயத்தில் உள்ள பாடல் :-

காநிக ராங் கொடைச் சொக்கலிங் கையன்
கனிந் தொழுகுந்
தேனீ கராம்வருக் கக்கோவை கொண்டு சிற்
றம்பலம் பால்
தானியநெல்விளை பூசாரிபட்டி
தனைச் சருவ
மானிய மீந்தன னீடுழி காலமும்
வாழ்க வென்றே.

இவர் செய்த நூல்கள் :

க. ஆண்டவ ராயன் கோவை—செய்யுள் ருOஉ
உ. பெருந்துறை ஆன்ம நாதர் யமக வந்தாதி
ங. ஆண்டவ ராயன் கட்டளைக் கலிப்பா ஷை
ச. விருத்தம்—ரு ஷை
ரு. கட்டளைக் கலித்துறை—ஷை
சா. கொச்சகங்கள்—ஷை
எ. மகா நவமி விருத்தங்கள் ஷை
அ. வெண்பாக்கள் ஷை
கூ. ஷை ஆண்டவ ராயன் மகன் குழந்தைத்துரை மீது பலகவி
கO. ஆண்டவ ராயன் வண்ணம்
கக. ஷை கமுக விருத்தம்—கO
கஉ. பிரான்மலைப் புராணம்
கங. பிரான்மலை மங்கைபாகக் கடவுள் விருத்தம் கO
கச. மூவரையன் வண்ணம்
கரு. மூவரையன் (வீரைத்திருவேங்கடநாதன்) விறலி விடு தூது
கசா. சிவந்தெழுந்த பல்லவராயனுலா
கஎ. ஷை பிள்ளைத் தமிழ்
கஅ. மருங்காபுரி வீரப்பூச்சிய நாயகர் கோவை
ககூ. ஷை பிள்ளைத் தமிழ்

இவர் மிக்க கொடையாளியாகவு மிருந்தது பற்றிப் பலராலும் கொண்டாடப்பட்டுள்ளார்.

---

டாக்டர் மு. வரதராசனுர் அவர்கள்

"கல்வெட்டு" முதலிதழ் பற்றி :

'கல்வெட்டு காலாண்டு இதழ் ஒன்று வரப்பெற்றேன். இதழிலுள்ள கட்டுரைகள் பயனுள்ள ஆராய்ச்சிக் கருத்துகளாக உள்ளன. தங்கள் முயற்சி வெல்க'

# மகன் தந்தைக்கு நடுவித்த கல்

கு. தாமோதரன், எம். ஏ.,
பதிவு அலுவலர்.

போரில் விழுப்புண் ஏற்று வீரமரணமடைந்த வீரர்களுக்கும், ஆநிரைகளை மீட்டு எறிந்துபட்ட மறவர்களுக்கும் புலியுடன் பொருது வீழ்ந்துபட்ட மாவீரர்களுக்கும் நடுகற்கள் எடுக்கப்பட்டன. மனிதர்களுக்கு மட்டுமின்றி விலங்கினங்களுக்கும் கல் நடப்பட்டன. பல்லவ மன்னன் முதலாம் மகேந்திரவர்மனின் காலத்தைச் சார்ந்த (கி.பி. 7-ஆம் நூற்றாண்டு), எடுத்தனூரில் கிடைத்துள்ள ஒரு கல்வெட்டு பாண அரசருடைய மருமக்கள் பொற்றெக்கையாரின் இளமகன் கருந்தேவக்கத்தி என்பவன் தன்னுடைய எருமைகளைக் காந்திருந்தபொழுது வீரமரணம் அடைந்தான். அவன் அருகில் இருந்த கோவிவன் என்னும் பெயரை உடைய நாய் இரு கள்ளர்களைக் கடித்துக் காத்துநின்றது என்ற செய்தியினைக் குறிக்கிறது. இறந்துபட்ட வீரனுக்கும், காத்து நின்ற நாய்க்கும் சேர்த்து கல் நடப்பட்டது.

அய்யப்பதேவனின் ஆட்சிக் காலத்தில் (கி.பி. 9-ஆம் நூற்றாண்டின் இறுதி) பொறிக்கப்பட்ட ரெட்டியூரில் கிடைத்துள்ள கல்வெட்டு வேணாட்டைச் சார்ந்த இருசப்பையனார் என்பவருடைய அடியவன் அளய்குட்டி என்பான் காட்டுப் பன்றியினைக் குத்தி வீரமரணம் அடைந்தான் என்ற செய்தியினைக் குறிக்கிறது. மரணமடைந்த இவனுக்கும் கல் எடுக்கப்பட்டது.

நடுகல் யார் யாருக்கு எடுக்கப்பட்டது என்பதை அறிவது போன்று, யாரால் எடுக்கப்பட்டது என்பதை ஆய்தலும் இன்றியமையாத ஒன்றாகும். பெரும்பான்மையான நடுகற்களில் யாரால் இக்கல் நடப்பட்டது என்ற குறிப்பு காணப்படவில்லை. கல்வெட்டின் முடிவில் 'காக்க நீலன் பூசல் சென்று பட்ட கல்' 'குன்றக் கண்ணியார் கல்', 'அக்கந்தைகோடன் தொறு விடுவித்துப் பட்டான் கல்', 'வின்றன் வடுகன் புலி குத்திப்பட்டான் கல்' என்று இறந்து பட்ட வீரர்களின் பெயர்கள் பொறிக்கப் பட்டிருப்பதால், அவர்களுக்காக இக்கல் நடப்பட்டிருக்க வேண்டும் என்பது வெளிப்படை.

ஒரு சில கல்வெட்டுகளில் யாரால் யாருக்கு கல் எடுக்கப் பட்டது என்ற குறிப்பு காணப்படுகிறது. இந்த வகையில் செ. கூடலூரில் கிடைத்துள்ள முதலாம் மகேந்திரவர்மனின் கல்வெட்டு மிகவும் முக்கியத்துவம் வாய்ந்தது.

கல்வெட்டு :

"பாண அரசருடைய மருமக்களான கந்த விண்ணனார் கூடலில் ஆநிரை கவர்ந்தபோது பொன்னரம்பனார் கொல்லகச் சேவகன் காகண்டி அண்ணாவன்" என்பான் அவ்வாநிரைகளை மீட்டு வீரமரணம் அடைந்தான். அவனுக்காக கூடலைச் சேர்ந்த இளமக்கள் கல் நட்டுவித்தனர் என்று குறிக்கிறது

இளமக்கள் என்ற சொல்லுக்கு பணியாளர்கள் அல்லது வீரர்கள் என்று பொருள் கொள்ளலாம். எனவே இறந்தபட்ட வீரனின் போர் வீரர்கள் அல்லது பணியாளர்கள் இக்கல்லை எடுத்திருக்கலாம். அல்லது இளமக்கள் என்பது வயதில் இளையவராக இருக்கலாம். இவர்கள் ஏன் கல்

சென்றவன் ஒரு இளைஞனாக இருக்கலாம். அவன் விழுப்புண் ஏற்று வீரமரணம் அடைந்திருக்கலாம். அவனுடைய வயதை ஒத்த இளைஞர்கள் அவனுடைய புகழைப் பறை சாற்றுகின்ற வகையில் இந்தக்கல்லை எடுத்திருக்கலாம். இறந்தபட்ட வீரனுக்கும், அவனுக்காகக் கல் எடுத்தவனுக்கும் எந்தவித உறவு முறை இருந்தது என்பதை மேற்குறிக்கப்பட்ட கல்வெட்டில் குறிக்கப்படவில்லை. ஆனால் சில கல்வெட்டுகளில் இறந்தவன் யார் என்பதும், அவனுக்கும் கல் எடுப்பித்தவனுக்கும் என்ன உறவு முறை இருந்தது என்பதும் குறிக்கப்பட்டுள்ளன.

அண்மையில் தமிழ் நாடு அரசு தொல் பொருள் ஆய்வுத்துறையினரால் செல்லம்பட்டி என்ற ஊரில் கண்டுபிடிக்கப்பட்டுள்ள ஒரு கல்வெட்டு மிகவும் முக்கியத்தும் வாய்ந்ததாகும். தமிழ் எழுத்துக்களில் பொறிக்கப்பட்டுள்ள இக்கல் வெட்டு கி.பி. 9-ஆம் நூற்றாண்டின் இறுதியைச் சார்ந்தது. (சகரயாண்டு 822+78—கி. பி. 900).

கல்வெட்டு:

"ஸ்வஸ்தி ஸ்ரீ சகரையாண் டெண்ணூற்றிருபத்திரண்டாவது
ஆதித்தன் மகரத்தில் நிற்க
ஐயப்பதேவன் விராச்சியம் மாளக்
கங்காணுமன் மகன் பிருதிபதியும், நுளம்பன் மகன்
சிவமாரைய்யனும்
மறவர்குன்றில் லெறிந்த ஞான்று தகடூருடைய மாவலிவாணராய
ரடியான்
கடல்மாணிக்கன் சிவமாரைய்யனுக்காய் எறிந்து பட்டார்
அவர் பெரியம் மகன் மாதேவன் நிக்கல்லு நடுவித்தான்
ஸ்ரீ மதியுளி"

ஐயப்பதேவன் என்ற மன்னன் ஆட்சி செய்து வந்தான். அவன் எந்தப் பகுதியினை ஆண்டு வந்தான் என்பது குறிக்கப்படவில்லை. அந்த சமயத்தில் கங்காணுமன் என்பவனுடைய மகன் பிருதிபதியும், நுளம்பன் என்பவனுடைய மகன் சிவமாரைய்யனும் 'மறவர் குன்றில்' எதிர்ந்தபோது போரிட்டனர். அப்பொழுது தகடூர்ப் பகுதியை மாவலிவாணராயர் என்பார் ஆட்சி செய்துவந்தார். அவருடைய அடியான் (சேவகன்) கடல்மாணிக்கன் என்பவன் நுளம்பன் மகன் சிவமாரைய்யனுக்காக போரிட்டு இறந்து பட்டான். இறந்து பட்ட கடல்மாணிக்கன் என்பவனுடைய பீடும் பெயரும் பொறித்து அவனுடைய பெரிய மகன் மாதேவன் என்பவன் கல் எடுப்பித்தான் என்று கல்வெட்டு குறிக்கிறது.

"கடல் மாணிக்கன் சிவமாரைய்யனுக்காய் எறிந்து பட்டார். அவர் பெரிய மகன் மாதேவன், இக்கல் நடுவித்தான்" என்ற அடிகளை வைத்துக் கொண்டு ஆராயும் பொழுது இறந்தபட்ட வீரனுக்கு பல மக்கள் இருந்திருந்தாலும் பெரிய மகனே தன்னுடைய தந்தையின் ஈமச்சடங்கை செய்ய வேண்டிய கடமைப் பாட்டிற்கு உரியவன். இக்கருத்தினை விளக்குகின்ற வகையில் கடல் மாணிக்கனுடைய பெரிய மகன் மாதேவன் என்பவன் தன்னுடைய தந்தைக்காக இக்கல்லை நடுவித்திருக்கிறான். தந்தை இறந்த பிறகு அவனுக்குச் செய்ய வேண்டிய இறுதிச் சடங்கினை (ஈமச்சடங்கு) மூத்தப் பிள்ளை (பெரிய மகன்) செய்கின்ற வழக்கம் தமிழ் நாட்டில் வாழையடி வாழையாக இருந்து வருகிறது என்பதை இக்கல்வெட்டு தெள்ளிதின் உணர்த்தி நிற்கின்றது.



இறவாத இன்ப அன்பு வேண்டிப்பின் வேண்டுகின்றார்
பிறவாமை வேண்டும்; மீண்டும் பிறப்புண்டேல் உன்னை என்றும்
மறவாமை வேண்டும்; இன்னும் வேண்டு நான் மகிழ்ந்து பாடி
அறவா நீ ஆடும் போதுன் அடியின் கீழிருக்க என்றார்.

என சேக்கிழார் காரைக்கால் அம்மையின் இறையன்பைப் போற்றுவார். அம்மை வேண்டியது கூத்தாடும் குழகர் ஆடுகின்ற போது அவர் அடியின் கீழிருக்கவேண்டும் என்பதல்லவா! இதோ கங்கைகொண்டசோழபுரத்தில் இராஜேந்திரன் எடுத்த கோயிலில் ஆடவல்லபெருமானின் அடியின் கீழ், எலும்பும் தோலுமாய் கையிலே தாளம் ஏந்தி ஆனந்த தாண்டவத்தை கண்டு மெய்மறந்திருக்கும் காரைக்கால் அம்மை. சோழர் தலைநகர் கங்கை கொண்டசோழபுரத்தில் இருக்கும் இவ்வெழில் சிற்பத்தைக் கண்டுதான் சேக்கிழார்அவ்வாறு பாடினரோ!

புதிய செய்திகள் :

## திருவையாறு

தஞ்சை அருகில் உள்ள திருவையாற்றில் ஐயாறப்பர் கோயில் கருவறையின் தெற்குப் பக்கச் சுவற்றில் தெள்ளாற்றெறிந்த நந்திவர்மனின் கல்வெட்டு கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. இதுகாறும் இக்கோயில் ஆதித்த சோழனால் கட்டப்பட்டது என்ற கருத்து இருந்து வருகிறது, இக்கோயில் ஆதித்த சோழனால் கட்டப்பட்டது எனில் தெள்ளாற்றெறிந்த நந்திவர்மன் காலத்தால் பிற்பட்டவன். தெள்ளாற்றெறிந்த நந்திவர்மன் காலத்தால் முற்பட்டவன் எனில் இக்கோயில் ஆதித்த சோழனால் கட்டப்பட்டதல்ல என்பதை இக்கல்வெட்டு முடிவு செய்வதாக உள்ளது.

*கண்டுபிடிப்பு :* திரு. இராசகோபால், இத்துறை கல்வெட்டுப் பயிற்சி நிறுவன மாணவர்.

## திருவதிகையில் நுளம்பர் சிலை

தெள்ளாற்றெறிந்த நந்திவர்மன் காலத்திற்கு (846-869) முன் கட்டப்பெற்ற கோயில் எட்டு வீரட்டானங்களுள் ஒன்றான திருவதிகை. இங்கு தென் திருச்சுற்று மாளிகையில் கிழக்கு நோக்கிய நிலையில் உள்ள ஒரு சிற்பம், துர்க்கை என்று இன்று வழங்கப்படுகிறது.

தமிழகச் சிற்பக்கலையினின்றும் மாறுபட்டுள்ள இது நுளம்பர் கலைப் பாணியில் அமைந்தது. வழவழப்பாக அமைந்த இச்சிலையின் உயரம் சுமார் 1½ அடிதான். பின்னால் சிம்மம் நிற்க, தேவி ஒரு காலை கீழே ஊன்றி நிற்கிறாள். நான்கு கரங்கள் உள்ளன. மேலிரு கரங்கள் சங்கும் சக்கரமும் ஏந்தியுள்ளன. கீழிடக்கரம் மகிஷனைப் பிடித்து வலக்கரத்தால் சூலத்தை குத்தும் நிலையில் காணப்படுகிறாள்.

இதை சோழர்கள் நூளம்பபாடியை வெற்றி கண்டபோது வெற்றிச் சின்னமாக கொண்டு வந்திருக்க வேண்டும். திருவையாற்றில் நூளம்பர் தூண்கள் உள்ளன. முதல் இராஜாதிராஜன் சாளுக்கியத் தலைநகர் கல்யாணியை கைப்பற்றிய போது அங்கிருந்து கொண்டு வந்த துவாரபாலர் சிலை ஒன்று தாராசுரத்தில் இருந்தது. இப்பொழுது தஞ்சைக் கலைக்கூடத்தில் உள்ளது. இது போல் வெற்றிச் சின்னங்களாகக் கொண்டு வரப்பெற்ற வங்கத்து பாலர் சிற்பங்கள், சாளுக்கியர், நூளம்பர் சிலைகள் தமிழகத்தில் சில இடங்களில் உள்ளன.

( *கண்டுபிடிப்பு :* செல்வி மார்க்சிய காந்தி, இத்துறை கல்வெட்டுப் பயிற்சி நிறுவன மாணவி ).

# புலியூரானில் சமணத்திருமேனிகள்

இராமனுதபுரம் மாவட்டத்திற்குட்பட்ட அருப்புக்கோட்டை வட்டத்துள் திருச்சுழியலுக்கு ஆறு கி.மீ. மேற்காக உள்ள புலியூரான் என்னும் ஊரின் தென் மேற்குப் பகுதியில் கிழக்கு மேற்காகச் செல்லும் வண்டிப் பாதை ஒன்றின் வடக்குப் பக்கத்தில் இரண்டு சமணத்திருமேனி கள் காணப்படுகின்றன. தலைக்கு மேல் ஐந்தலை அரவத்துடன் அமர்ந்த நிலையில் காட்சி தரும் பார்சுவநாதரும், தலைக்கு மேல் முக்குடை திகழ அரியணையில் அமர்ந்தவராக தீர்த்தங்கரர் ஒருவரும் வடக்கு நோக்கிய வராக காட்சிதர. இக்கற்றிருமேனிகளை ஊரார் 'அமணப்பசாமி' என்று அழைக்கின்றனர். கழுகுமலை, கீழக்குயில்க்குடி, முத்துப்பட்டி, சோழ வாண்டிபுரம், பள்ளிமடம், ஆகிய ஊர்க் கல்வெட்டுகளில் குறிக்கப்படும் 'குறண்டி திருக்காட்டாம்பள்ளி' என்ற சமணப் பள்ளியும் இதே அருப்புக்கோட்டை வட்டத்திற்குட்பட்டே இருந்திருக்கவேண்டும் என்ற கருத்து ஈண்டு எண்ணற்குறியது.

கண்டுபிடிப்பு: திரு. இராசேந்திரன், இத்துறை கல்வெட்டுப் பயிற்சி நிறுவன மாணவர்.

---

# திருமலை

வடார்க்காடு மாவட்டம் போளூர் வட்டம் திருமலையில் உள்ள சமணக் கோயிலில் மூன்று புதிய கல்வெட்டுகள் கண்டறியப்பட்டிருக்கின்றன. இங்கு மும்முடிச் சோழன் மனைவி இலாடமாதேவியின் தந்தை நிக்குந்தமாச்சயன் அவன் தந்தை விக்கடி அரைசர் பெயரால் தர்மம் அளித்துள்ளதைக் கூறு கிறது, ஒரு கல்வெட்டு. மற்றொரு கல்வெட்டு இராட் டிரகூட மன்னன் மூன்றாம் கிருஷ்ணனின் பதினைன்காம் ஆட்சி ஆண்டைச் சேர்ந்தது. மற்றொன்று சகர ஆண்டு 803-யை (கி.பி. 879)ச் சேர்ந்தது.

கண்டுபிடிப்பு: திரு. பூங்குன்றன், இத்துறை கல்வெட்டுப் பயிற்சி நிறுவன மாணவர்.

## தென்காசி குலசேகரன் மண்டபம்

பராக்கிரம பாண்டியனின் தம்பியாகிய குலசேகர பாண்டியன், தான் விசுவநாதர் கோயிலுக்கு உள்ளேயே விசுவநாதருக்குத் திருவோலக்க மண்டபமாக ஒரு மண்டபம் அமைத்ததாகத் தன் கல்வெட்டு ஒன்றில் குறிப்பிட்டுள்ளான். இம்மண்டபத்திற்கு குலசேகரன் மண்டபம் என தன் பெயரையே இட்டுள்ளான்.

தற்பொழுது விசுவநாதர் கோயில் கோபுரவாயிலைக் கடந்து உள்ளே சென்றதும், சிற்பங்களை கொண்ட தூண் மண்டபம் ஒன்று உள்ளது. இது திருவோலக்க மண்டபம் என்று தற்பொழுது குறிப்பிடப் படுகிறது. இம்மண்டபமே குலசேகர பாண்டியன் தான் அமைத்ததாகக் குறிப்பிடுகின்ற குலசேகர பாண்டியன் மண்டபமாக இருக்கலாம். "இன்னுயனுற்குத் திருவொலக்க மண்டபமாக குலசெகரன் மண்டபமுந் திருப்பணி செய்வித்து" என்பது இச் செய்தியினைக் குறிப்பிடும் கல்வெட்டு வரிகள்.

S.I.I. Vol. V. Text. No. 762.

செய்தி: திரு. செந்தில் செல்வகுமரன், இத்துறை கல்வெட்டுப் பயிற்சி நிறுவன மாணவர்.

## திருவக்கரையிலிருந்து புதிய ஓலைச்சுவடிகள்

கி. இராஜாராம்

திருவக்கரை ஸ்ரீ சந்திரமௌளீசுவர ஆலயத்தின் பரிபாலரும் ஊர் மணியக் காரருமாகியவரிடமிருந்து இரண்டு ஓலைச் சுவடிகள் கிடைத்துள்ளன. இவற்றுள் ஒன்று எண் சுவடியாகவும், மற்றொன்று கதைப் பாடலாகவும் உள்ளது. இன்னும் பல ஓலைச் சுவடிகள் இவரிடமிருந்து அழிந்துபட்டன என்று இவர் கூறுகிறார்.

நூல் அறிமுகம் :

1. Inscriptions of Ceylon--Volume I, Early Brahmi inscriptions, S. Paranavitana. Archaeological Survey of Ceylon.

தமிழி, தமிழ்ப் பிராம்மி என்றெல்லாம் அழைக்கப்படும் மிகவும் தொன்மையான தமிழ்க் கல்வெட்டுகளைப் பற்றி பலர் அண்மையில் ஆராய்ச்சி செய்து வருகின்றனர். இதுபோன்று ஈழத்திலும் ஏராளமான கல்வெட்டுகள் கிடைத்துள்ளன. கி.மு. 3-ஆம் நூற்றுண்டிலிருந்து கி.பி. முதல் நூற்றுண்டு வரை உள்ள காலத்திற்குட்பட்ட கல்வெட்டுகளைப் பற்றி நல்லதொரு நூலை இலங்கை அரசு தொல்பொருள் ஆய்வுத்துறை பதிப்பித்துள்ளது. S. பரனவிதாஞ அவர்கள் இதை பதிப்பித்துள்ளார். நல்ல ஆராய்ச்சிப் பதிப்பு. பல அரிய செய்திகள் உள்ளன.

சோழர் சிற்பம் :

2. Chola Sculpture, Chhavi, Golden Jubilee Volume by M. A. Dhakhy.

சோழர்களது சிற்பம் எப்படி தொடங்கிற்று? பல்லவர்களது இறுதிக் கலைதான் சோழர் கலையாக மாறியதா? அல்லது அப்பகுதியில் ஆண்ட முத்தரையர் கலை சோழர் கலையாக மாறியதா? விஜயாலயன் கால சிலைகளில் என்ன தன்மை மேலோங்கி நிற்கிறது. ஆதித்தன், பராந்தகன் கால சிற்பங்கள் எவ்வாறு மிளிர்கின்றன. செம்பியன் மாதேவியும் ராஜ ராஜனும் தங்கள் சிற்பங்களில் எதைப் படைத்து மகிழ்ந்தனர்? பிற்கால சிற்பங்களின் பெருமை சிறுமை என்ன? சோழர் சிற்பங்களின் சிறந்த பெருமைகள் எவை என்பவற்றை மிக அழகிய நடையில் இக்கட்டுரையில் எழுதியுள்ளார்.

சிந்துவெளி எழுத்துகள் :

3. Material for the study of the Indus Script-a concordence to the Indus inscription; by Seppo Koskennimi, Asko Parpola, and Simo Parpola

சிந்துவெளியில் வழங்கியது திராவிட மொழி எனப் பெரும்பாலான ஆராய்ச்சி வல்லுநர்கள் முடிவு செய்துள்ளனர். அவை ஒரு வகை சித்திர எழுத்துகளில் எழுதப்பட்டுள்ளன. இதுகாறும் எவ்வளவு முத்திரைகளில் இவ்வெழுத்துகள் கிடைத்துள்ளனவோ அவை அனைத்தையும் 'கம்ப்யூடர்' உதவியால் அப்படியே, வரைந்து வரிசைப்படுத்தி அனைவருக்கும் பயன் படும்படி ஃபின்னிஷ் ஆராய்ச்சியாளர்கள் பதிப்பித்துள்ளனர். சுமார் 500 பக்கங்களுக்குமேல் உள்ள இந்நூல் 'ஹெல்சின்கி'யில் அச்சிடப்பட்டுள்ளது.

பிரஞ்சு மொழியில் விஜயநகரக் கல்வெட்டுகள் :

4. L' E'pigraphie De Vijayanagar—by Vasundhara Filliozat, Ecole Francise D' Extreme Oriente-Paris. 1973

சுமார் 150 விஜயநகரக் கல்வெட்டுகளை, சிறப்பாக வீரபுக்கனன் கல்வெட்டுகள், வரலாற்றுக் குறிப்பு, கல்வெட்டுகளின் முழு வாசகம், பிரெஞ்சு மொழிபெயர்ப்பு முதலியவற்றுடன் பாரீஸ் மாநகரில் பதிப்பித்துள்ளனர். இவ்வரும் வரலாற்று நூலை வசுந்தரா பிலியோசா அவர்கள் எழுதியுள்ளார்கள்.

**3-வது உலகத் தமிழ்மாநாட்டு ஆய்வுக் கட்டுரைகள் :**

5. Proceedings of the third international conference Seminar Paris-1970. Institute Francise D' Indologie Pondichery, 1973.

1970, ஜூலை 15 லிருந்து 18 வரை பாரிஸ் மாநகரில் மூன்றுவது உலகத் தமிழ் மாநாடு கூடியது. அம்மாநாட்டில் ஆயப்பட்ட அனைத்துக் கட்டுரைகளும் தொகுத்து இந்நூலில் பதிப்பிக்கப்பட்டுள்ளன. தமிழக முதல்வர் மாண்புமிகு கலைஞர் டாக்டர் மு. கருணாநிதி அவர்களும், மாநாட்டு தலைவர் பேராசிரியர் பிலியோசா அவர்களும், யுனஸ்கோ இயக்குநர் மால்கோம் ஆதிசேஷய்யா அவர்களும் பிறரும் அம்மாநாட்டில் ஆற்றிய சிறப்புரைகளும் இதில் இடம் பெற்றுள்ளன.

பிரஞ்சு மொழியில் திருமுருகாற்றுப் படை :

இந்தியப் பண்பாட்டை ஆயும் பிரஞ்சுகழகம் பாண்டிச்சேரியில் தனது நிறுவனத்திலிருந்து இதுகாறும் பல நூல்களை பிரஞ்சு மொழியில் வெளியிட்டு வருகிறது அனைவரும் அறிந்ததே. இந்நிறுவனம் இதுகாறும் 51 நூல்களை வெளியிட்டுள்ளது. இதன் தலைவர் பேராசிரியர் பிலியோசா அவர்கள் ஆண்டாளின் திருப்பாவையை பிரஞ்சு மொழியில் மொழி பெயர்த்து 1971-ல் வெளியிட்டார்கள். இப்பொழுது திருமுருகாற்றுப் படையை மொழி பெயர்த்து அச்சிட்டுள்ளார்கள். முருகாற்றுப் படையை தமிழிலும், பிரஞ்சு மொழியிலும் ஆராய்ச்சி குறிப்புகளுடன் பேராசிரியர் பிலியோசா அவர்கள் வெளியிட்டுள்ளார்கள்.

"திருமலை நாயக்கர் வரலாறு" By அ. கி. பரந்தாமனார், பாரி நிலையம், சென்னை. விலை ரூ. 5-00.

"சாசனமும் தமிழும்" By A. வேலுப்பிள்ளை, தமிழ்த்துறை, இலங்கைப் பல்கலைக் கழகம், Peradeniya, விலை ரூ. 10-00.

"இந்திய ஓவியம்" By M. S. ராமசாமி, வாசகர் வட்டம், சென்னை-17. விலை ரூ. 6-00.

"யாவரும் கேளிர்" By இரா. நாகசாமி, வாசகர் வட்டம், சென்னை-17. விலை ரூ. 8-00.

"**Motivation of Temple Architecture in Saiva Siddhanta**" By J. W. V. Curtis, கிடைக்குமிடம் குறிக்கப்படவில்லை.

"திராவிடர் ஆதி வரலாறும் பண்பாடும்" By V. சிவசாமி, யாழ்பாணக் கல்லூரி, வட்டுக்கோட்டை இலங்கை.

"கேரளத்து வரலாற்றுச் சின்னங்கள்" (Monuments of Kerala) By H. Sarkar, மத்திய அரசு, தொல்பொருள் ஆய்வுத்துறை செயலகங்கள். விலை ரூ. 3-00

---

## இது என்ன?

### இரட்டை புதையல்



இறந்துபட்ட கணவனுடன் தீப்பாய்ந்து உயிர்நீத்த கற்புடைப் பெண்டிரைப் பற்றி தமிழ் இலக்கியங்களும் வடமொழி இலக்கியங்களும் கூறுகின்றன. இறந்த கணவனை எரிக்காமல் குழியில் புதைத்தால் என்ன செய்வது? பெண்கள் உயிரோடு புதைக்கப்படுவார்களா? இப்படியும் நடந்திருக்குமா? ஆம்; ஐயாயிரம் ஆண்டுகளுக்கு முற்பட்ட இந்தியாவில் இவ்வாறு ஒரு மரபு இருந்தது போலும்! அதைத்தான் இவ்விரட்டைப் புதையல் நமக்குக் கூறுகிறது. இப்புதையலில் காணப்படும் எலும்புக் கூடுகளில் ஒன்று ஆண் மகனின் கூடு. மற்றது பெண்ணுடையது என்பர் இறந்த ஆணோடு உயிரோடு புதைக்கப்பட்ட பெண் கூடு இது. ஒரு குழியில் மட்டும் இது போல் காணப்பட்டது என்றில்லை. சில குழிகளில் இதுபோல் ஆணும், பெண்ணுமாக இரட்டைப் புதையல்கள் கிடைத்துள்ளன என்று S. R. ராவ் கூறுகிறார்.

குஜராத் மாநிலத்தில் லோத்தால் என்ற இடத்தில் அகழ்வாய்வில் இவை கிடைத்துள்ளன. லோத்தாலில் அன்று வாழ்ந்தவர்கள் சிந்துவெளி மக்கள். ஆதலின் சிந்துவெளி நாகரீகத்தின் இறுதியில் இறந்த கணவனுடன் மனைவியையும் உயிரோடு புதைக்கும் வழக்கம் இருந்திருக்கிறது.

இதுபோன்ற வழக்கம் தமிழகத்தில் எப்போதாவது இருந்ததா?

இக்கேள்விக்கு அடுத்த இதழில் 'கல்வெட்டு' விடைதரும்.

# கல்வெட்டில் அந்தாதி

ச. செங்கல்வராயன்
அச்சுப்பிழை திருத்துபவர்
(தமிழ்நாடு அரசு தொல்பொருள் ஆய்வுத்துறை)

திருச்சிராப்பள்ளி மலையில், மகேந்திரவர்மன் குடைவித்த குடைவரைக் கோயில் ஒன்று இருக்கிறது. இதன் பின்புறச் சுவரில் 10-11-ஆம் நூற்றாண்டு எழுத்துகளில், ஓர் அந்தாதி பொறிக்கப்பட்டுள்ளது.[1] இதை 'வேம்பையர் கோன் நற்பந்தமார் தமிழ் நாராயணன்' இயற்றினான் என அறிகிறோம். இதை "கலித்துறை" எனக் கல்வெட்டுக் கூறுகிறது.

மற்பந்த மார்[வ]ன் மணியன் மகன்மதிள் வேம்பயர்கோன்
நற்பந்த மார்தமிழ் நாரா யணனஞ் சிராமலைமெற்
கற்பந்த னிழலில் வைத்த கலித்துறை [நூறுங்]கற்பார்
பொற்பந்த னிழல ரன்றிருப் பாதம் பொருந்துவரே

மாட மதிரை மணலூர் மதிள்வெம்பை
யோடமர் செஞ்சலூர் குண்டூர்இந் நீடிய
நற்பதிக் கோனரா யணனஞ் சிராலைமேற்
கற்பதித்தான் சொன்ன கவி

இப்பாடலில் நூறு செய்யுள்கள் உள்ளன எனக் கல்வெட்டே கூறுவதைக் காணலாம். இவ்வந்தாதி "உலகம் மடந்தை" என்றுத் தொடங்குகிறது. ஒவ்வொரு செய்யுளின் இறுதிச் சொல்லையும் அடுத்த செய்யுள் தொடக்கச் சொல்லாகக் கொண்டுள்ளது. நூறாவது பாடலின் இறுதிச் சொல் முதல் பாடலின் முதல் சொல்லான "உலகம்" என்றே முடிகிறது. ஆதலின் இது மண்டல அந்தாதி வகையைச் சார்ந்தது என அறியலாம். (இவ்விதழில் சங்ககால அந்தாதி என்னும் கட்டுரையையும் காணவும்). கல்வெட்டு இப்பாடலை "கற்பந்தல் நிழலில் வைத்த கலித்துறை" எனக் கூறுவது கண்டு இன்புறத்தக்கது. கற்பந்தல் என்று குடைவரைக் கோயில் சிறப்புடன் புதுமையாகக் குறிக்கப்படுகிறது.

1. S. I. I. vol. IV. No. 167

## கலைஞர் பாராட்டிய துறை

"பாஞ்சாலங்குறிச்சி கட்டபொம்மன் வாழ்ந்த கோட்டை. வெள்ளையர்களால் இடிக்கப்பட்டு உழுது ஆமணக்கு விதைகளைப் போட்டு மண் மேடிட்டு, அது எங்கே இருக்கிறது என்கின்ற கேள்விக் குறியோடு இருந்த காலம் ஒன்று உண்டு. அதைத் தமிழ்நாட்டு அகழ்வாராய்ச்சித் துறையினர் 1967-ஆம் ஆண்டு தோண்டிப் பார்க்க முற்பட்டு அந்தக் கோட்டையின் அடித்தளங்களை எல்லாம் இன்றைக்குக் கண்டுபிடித்திருக்கிறார்கள். கட்டபொம்மனுடைய கோட்டை அடித்தளங்கள் 2' உயரம். இவை பூமிக்கு வெளியே காணப்படும் வகையில் அகழ்வாராய்ச்சித் துறையினர் தங்களது பணியை மிகச் செம்மையாகச் செய்து முடித்திருக்கிறார்கள். அவர்களை எல்லாம் நான் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்."

1973-ஆம் ஆண்டு மே திங்கள், 12-ஆம் தேதியில் பாஞ்சாலங்குறிச்சி கட்டபொம்மன் கோட்டைப் பகுதிகளைப் பார்வையிட்டு, அங்கு நடந்த பெருவிழாவில் டாக்டர் கலைஞர் அவர்கள் ஆற்றிய பேச்சின் ஒரு பகுதி. அப்பொழுதுதான் கட்டபொம்மன் நினைவாக அங்கு ஒரு கோட்டை அமைக்க ஆணையிட்டார்கள். அக்கோட்டை வியத்தகும் விரைவில் கட்டி முடிக்கப்பட்டு இம்மாதம் 18-ம் நாள் மாண்புமிகு முதல்வர் அவர்களால் திறக்கப்படவிருக்கிறது.

## கல்வெட்டு முதலிதழ் பற்றி

**டாக்டர் வ. சுப. மாணிக்கம்,**
தமிழ்ப் பேராசிரியர், அண்ணாமலைப் பல்கலைக்கழகம்.

கல்வெட்டு முதலிதழே நல்ல எதிர்காலம் உடையது என்பதனைக் காட்டி நிற்கின்றது. டாக்டர் கலைஞர் சொற்பொழிவை முதலாவதாக அமைத்திருப்பது ஊக்க ஆக்கங்கட்கு நல்லுரமாகும். நல்ல தமிழ், நல்ல உரைநடை, கல்வெட்டில் வரும் அருஞ்சொற்களுக்குப் பொருள், ஆங்கிலத்திலும் கட்டுரை முதலான நற்கூறுகள் அமைந்துள்ளன. தமிழிலக்கியங்கட்கும் கல்வெட்டுக்கும் நெருங்கிய உறவுண்டு. இவ்வுண்மையை திரு. நடன. காசிநாதன் கட்டுரை தெளிவுபடுத்துகின்றது. இராசராசன் என்ற இயக்குநர்தம் கட்டுரை இப்பேரரசன் தன் பல்வகைத் தனித்தன்மையை எடுத்துக்காட்டுகின்றது. சுவையான முறையில் சில துணுக்குக்கள் இடைமடுத்திருப்பது கல்வெட்டுக்கு முகவெட்டு ஊட்டுவது போல் இலங்குகின்றது.

**மு. அ. முருகேசன், பி. ஏ., பி. எல்.**
துணை ஆணையாளர், இந்துசமய அறநிலைய ஆட்சித்துறை, மதுரை.

கவர்ச்சியாக, நிறைய சேதிகளைத் தாங்கி வெளி வந்திருக்கிறது. தொடர்ந்து வெளி வந்தால், தமிழகத்தின் பொற்கால வரலாறு முழுமையாக எழுதப்பட பேருதவியாக இருக்கும்.

தமிழ்நாடு அரசு தொல்பொருள் ஆய்வுத்துறையின் காலாண்டு இதழ்
இதழ் 2 ஆனந்த ஆண்டு ஆடித் திங்கள் விலை ரூ. 1-50.

## அட்டை படத்தின் விளக்கம்

தஞ்சை மாவட்டத்தில் திருப்பனந்தாள் அருகே திரைலோகி என்னும் ஊர் உள்ளது. அங்கே கோயிலில் இவ்வழகியச் சிற்பம் காணப்படுகிறது. முருகப் பெருமான் தெய்வானையுடன் நிற்கும் கோலம் காலின் ஒரு புறத்தே மயிலைக் காணலாம். இது தமிழ்நாட்டுச் சிற்பம் அல்ல. நூளம்ப மேலைச் சாளுக்கியக் கலை. சோழ மன்னர்கள் நூளம்பபாடி, கலியாணி முதலிய இடங்களைக் கைப்பற்றிய போது அங்கிருந்து பல அழகிய கலைப் பொருள்களில் ஈடுபட்டு வெற்றிச் சின்னங்களாகக் கொண்டு வந்துள்ளனர். அவற்றில் ஒன்று இவ்வழகிய சிற்பம். இதை திருப்பனந்தாள் வெ. மகாதேவன் இத்துறையின் கவனத்துக்கு கொண்டு வந்தார்.

## வெளிவந்து விட்டது! திரிபுவனம் கோயில்

குடந்தைக்கருகில் உள்ள திரிபுவனத்தில் மதுரையும் கருவூரும் ஈழமும் கொண்ட மூன்றாம் குலோத்துங்கன் தோற்றுவித்த பெருங் கோயிலை (கம்பஹரேஸ்வரர் என்று இன்று அழைக்கப் பெறுவது) பற்றிய ஆராய்ச்சி நூல்; அழகிய படங்களோடு மிளிர்கின்ற நூல் வெளிவந்து விட்டது. விலை 12-00 ரூபாய்தான்.

THE KAMPAHARESVARA TEMPLE BY H. SARKAR

## வெளிவர இருக்கிறது!

### தஞ்சை இராஜராஜேச்சுரம் BY இரா. நாகசாமி

தமிழகத்தின் தவப்புதல்வன் இராஜராஜன் தஞ்சையில் தோற்றுவித்த ஈடு இணையிலாப் பெருங்கோயில் இராஜராஜேச்சுரம் பற்றிய ஆராய்ச்சி நூல்.

## கிடைக்குமிடம்

தமிழ்நாடு அரசு
தொல்பொருள் ஆய்வுத்துறை
3/4, தெற்குக் கரைச் சாலை, சென்னை-28

தமிழ்நாடு அரசு தொல்பொருள் ஆய்வுத்துறைக்காக ஷெ துறையின் அச்சகத்தில் இத்துறையின் இயக்குநரால் அச்சிட்டு வெளியிடப்பெற்றது ஆசிரியர்; இயக்குநர் இரா. நாகசாமி